தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### திருவாரூரில் 5-வது நாளாக தொடர்ந்து மழை

திருவாரூர் மாவட்டத்தில் திங்கள்கிழமை (அக்டோபர் 13) ம் தேதி தொடங்கி மழை வெள்ளிக்கிழமை 5-வது நாள்களாக நீடித்தது. ஹுட்ஹுட் புயலால் ஆந்திரம் மாநிலம் பெரிதும் பாதிக்கப்பட்டது. அந்த புயலின் தாக்கம் தமிழ்நாட்டிலும் இருந்தது. கடந்த திங்கள்கிழமை முதல் தமிழகத்தில் பல இடங்களில் ஆங்காங்கே பரவலாக மழைப் பெய்து வருகிறது. இதே போல் திருவாரூர் மாவட்டத்திலும் திங்கள்கிழமை முதல் மழை பெய்து வருகிறது. நாள்தோறும் மதியம் மற்றும் மாலை வேளைகளில் மழை பெய்து வந்தது. வெள்ளிக்கிழமை காலையில் மழைப் பெய்தது. மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் அதிகப்பட்சமாக திருத்துறைப்பூண்டியில் 11.8 மில்லி மீட்டர் மழைப் பதிவானது. இதே போல் பிற இடங்களில் நீடாமங்கலம் - 10, மன்னார்குடி - 9.8, முத்துப் பேட்டை - 9.3, பாண்டவையாறு தலைப்பு - 2.8, திருவாரூர் - 1.8 என்ற அளவில் மழைப் பதிவானது. வெள்ளிக்கிழமை மாலையும் விட்டு விட்டு மழைத் தொடர்ந்து பெய்தது.

### காற்றழுத்தத் தாழ்வு நிலை: 2 நாள்களுக்கு மழை நீடிக்கும்

வங்கக் கடலில் புதிய காற்றழுத்தத் தாழ்வு மையம் உருவாகியுள்ளதால், தமிழகத்தில் மழை 2 நாள்களுக்கு நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வங்கக் கடலில் கடந்த சில நாள்களுக்கு முன்பு உருவான காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் "ஹுட்ஹுட்' புயலாக மாறி ஆந்திர மாநிலத்தைத் தாக்கியது. இந்த நிலையில் தமிழகம் - இலங்கை கடற்பகுதியை ஒட்டிய கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு

நிலை உருவாகியுள்ளது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: தமிழகம் - இலங்கையை ஒட்டியுள்ள கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை வெள்ளிக்கிழமை உருவானது. இதன் காரணமாக தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் வெள்ளிக்கிழமை மழை பெய்தது. குறிப்பாக சென்னையில் வெள்ளிக்கிழமை காலை தொடங்கிய முதல் இரவு வரை நீடித்தது. மேலும் இந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையின் காரணமாக அடுத்த 2 நாள்களுக்கு தமிழகம், புதுவையில் மழை பெய்யும் என்று தெரிவித்தனர். இந்த நிலையில், வெள்ளிக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் ராமநாதபுரம், தூத்துக்குடியில் 60 மி.மீ. மழையும், சாத்தான்குளம், தொண்டி, சிதம்பரத்தில் 50 மி.மீ. மழையும் பதிவாகிவுள்ளது. வாடிப்பட்டி, சங்ககிரி, ஒட்டபிடாரம் (40 மி.மீ.), ஸ்ரீவைகுண்டம், பாளையங்கோட்டை, அம்பாசமுத்திரம், கன்னியாகுமரி, கமுதி (30 மி.மீ.), கடலூர், சேரன்மாதேவி, பூதபாண்டி, ஆலங்காயம், திருப்பூர், ஆரணி, பரமக்குடி, குன்னூர், திருச்செந்தூர் (20 மி.மீ.), மணிமுத்தாறு, பாம்பன், சீர்காழி, பெரியகுளம், இரணியல், சிவகிரி, குளச்சல், ராமேஸ்வரம், பழனி, திருச்சி, திருப்பத்தூர், குழித்துறை, தென்காசி, ஈரோடு, அரியலூர், செங்கோட்டை, மணியாச்சி, வாலாஜா, பெரம்பலூர், கொடைக்கானல் (10 மி.மீ.) ஆகிய பகுதிகளிலும் மழை பெய்துள்ளது.

## <u>நாளை தொடங்குகிறது வடகிழக்குப் பருவமழை</u>

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை ஞாயிற்றுக்கிழமை (அக்.19) தொடங்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்தியாவில் தென்மேற்கு பருவமழை, வடகிழக்கு பருவமழை என இரண்டு விதமான பருவமழைக் காலங்கள் உள்ளன. தென்மேற்கு பருவமழையின் போது தமிழகம் தவிர பிற பகுதிகளிலும், வடகிழக்கு பருவமழையின் போது தமிழகத்தில் மட்டும் மழை பெய்யும். ஒவ்வொரு

ஆண்டும் தென்மேற்கு பருவமழை நிறைவு பெற்றவுடன் அக்டோபர் இரண்டாம் வாரத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கும். இந்தாண்டு இந்தியா முழுவதும் தென்மேற்கு பருவமழை சராசரியாக பெய்துள்ளது. மேலும் இந்தப் பருவமழையின் தாக்கம், வெப்பச்சலனம் ஆகியவற்றின் காரணமாக தமிழகத்திலும் ஓரளவு மழை பெய்தது. இந்த நிலையில், தென்மேற்கு பருவமழைக் காலம் முடிவுக்கு வந்துள்ள நிலையில், ஞாயிற்றுக்கிழமை (அக். 19) வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கான வாய்ப்புகள் உருவாகியுள்ளன. வடகிழக்கு பருவமழை காலத்தில் தமிழகம் முழுவதும் மழை பெய்யும். மேலும் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களின் எல்லையோர பகுதிகளிலும் மழை பெய்யும். 2004-ஆம் ஆண்டு முதல் 2011-ஆம் ஆண்டு வரை வடகிழக்குப் பருவமழை கூடுதலாக பெய்துள்ளது. ஆனால் 2012, 2013 ஆகிய ஆண்டுகளில் பற்றாக்குறையாக பெய்துள்ளது. இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை ஞாயிற்றுக்கிழமை தொடங்குவதற்கான சாத்திக்கூறுகள் தென் படுகின்றன. இந்தாண்டு வடகிழக்கு பருவமழை தமிழகத்தில் சராசரியாக இருக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

**இதுவரை வடகிழக்கு பருவமழையின் போது பெய்த மழை நிலவரம்**

2004 - 1 சதவீதம் அதிகம்

2005 - 79 சதவீதம் அதிகம்

2006 - 15 சதவீதம் அதிகம்

2007 - 21 சதவீதம் அதிகம்

2008 - 31 சதவீதம் அதிகம்

2009 - 12 சதவீதம் அதிகம்

2010 - 42 சதவீதம் அதிகம்

2011 - 23 சதவீதம் அதிகம்

2012 - 16 சதவீதம் குறைவு

2013 - 33 சதவீதம் குறைவு

## தமிழக எல்லையை வந்தடைந்தது கண்டலேறு நீர்

ஆந்திரத்தின் கண்டலேறு அணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர் தமிழகத்தின் எல்லையான ஊத்துக்கோட்டை அருகே உள்ள ஜீரோ பாயிண்டை வெள்ளிக்கிழமை மாலை வந்தடைந்தது. சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய ஏரிகளில் ஒன்றான பூண்டி ஏரியின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து வந்தது. இதையடுத்து தெலுங்கு கங்கை ஒப்பந்தப்படி கண்டலேறு அணையில் இருந்து தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது. இதையடுத்து, கடந்த ஆகஸ்ட் மாதம் கண்டலேறு அணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர் செப்டம்பர் மாதத்துடன் நிறுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து அக்டோபர் 13-ஆம் தேதி கண்டலேறு அணையில் இருந்து மீண்டும் தண்ணீர் திறக்கப்பட்டது. அந்தத் தண்ணீர் 152 கி.மீ தூரம் உள்ள கிருஷ்ணா கால்வாயைக் கடந்து தமிழகத்தின் எல்லையான ஊத்துக்கோட்டை அருகே உள்ள ஜீரோ பாயிண்டை வெள்ளிக்கிழமை மாலை 4 மணி அளவில் வந்தடைந்தது. பூண்டி ஏரியின் மொத்தக் கொள்ளவான 3,230 மில்லியன் கன அடியில், தற்போது 122 மில்லியன் கன அடி நீர் மட்டுமே இருப்பு உள்ளது. அங்கிருந்து செம்பரம்பாக்கம் ஏரிக்கு வினாடிக்கு 123 மில்லியன் கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதுகுறித்து பொதுப்பணித் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: கடந்த 13-ஆம் தேதி ஆந்திரத்தின், கண்டலேறு அணையில் வினாடிக்கு ஆயிரம் கன அடி நீர் திறக்கப்பட்டது. அந்த நீர் வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் வினாடிக்கு 50 கன அடியாக தமிழகத்தின் எல்லையில் உள்ள ஜீரோ

பாயிண்டை வந்தடைந்தது. இந்த நீரின் அளவு படிப்படியாக அதிகரிக்கும் என்றார் அவர்.

## காஞ்சிபுரம் மாவட்டத்தில் பலத்த மழை

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் வெள்ளிக்கிழமை பரவலாக பலத்த மழை பெய்ததது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. அவ்வப்போது லேசான மழை பெய்து வந்தது. இந்த நிலையில் வெள்ளிக்கிழமை காலை முதல் காஞ்சிபுரத்தில் பலத்த மழை கொட்டித் தீர்த்தது. இதனால் முக்கிய வீதிகளான காந்தி சாலை, காமராஜர் சாலை, பேருந்து நிலையம், ரயில்வே சாலை, விளக்கொளிப் பெருமாள் கோயில் தெரு, கோட்ராம்பாளையம் தெரு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மழைநீர் வெள்ளமென ஓடியது. நாள் முழுவதும் அவ்வப்போது விட்டு, விட்டு பெய்த மழையால் பொது மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். காஞ்சிபுரத்தில் முக்கிய வீதிகளில் மழைநீர் கால்வாய்கள் முறையாகப் பராமரிக்கப்படாததால், சாலைகளில் தண்ணீர் தேங்கி பெரும் சிரமத்தை ஏற்படுத்தியது. இதே போல் உத்தரமேரூர், ஆலந்தூர், சோழிங்கநல்லூர், செய்யூர் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளில் பரவலாக மழை பெய்தது.

செங்கல்பட்டில்...

செங்கல்பட்டு, செங்கல்பட்டு, சுற்றுப்புறப் பகுதிகளில் வெள்ளிக்கிழமை கனமழை பெய்ய தொடங்கியது.செங்கல்பட்டு, திருக்கழுகுன்றம், கல்பாக்கம், மாமல்லபுரம், திருப்போரூர், சிங்கபெருமாள்கோவில், மறைமலைநகர், கூடுவாஞ்சேரி, வண்டலூர், படாளம் ஆகிய பகுதிகளிலும் அதைச் சுற்றியுள்ள கிராமப்புறப் பகுதிகளிலும் வியாழக்கிழமை லேசான மழையும், இதையடுத்து வெள்ளிக்கிழமை காலை முதல் விட்டு விட்டு பெய்த மழை காலை 8 மணிக்கு மேல் தொடர்ந்து அவ்வப்போது கனமழையும் பெய்ததால் பொதுமக்களின் இயல்பு வாழக்கை பாதிக்கப்பட்டது. கடந்த சில நாள்களாக காஞ்சிபுரம்,

மதுராந்தகம், மறைமலைநகர், தாம்பரம் பகுதிகளில் மழை பெய்திருந்தும் செங்கல்பட்டில் மழையில்லாமல் இருந்து வந்தது. அவ்வப்போது சிறுதூரலை காட்டிய நிலையில் வியாழக்கிழமை இரவு பெய்யத் தொடங்கிய மழை சற்று வலுத்தது. இதனால் தீபாவளி நெருங்கி வரும் வேளையில் பேன்சி ஸ்டோர், துணிக் கடைகள், செங்கல்பட்டு பஜார் தெருவில், காய்கறி, மளிகைக் கடைகளில் மக்கள் நடமாட்டம் இல்லாததால் எதிர்பார்த்த வியாபாரம் இல்லாமல் வியாபாரிகள் அதிருப்தியில் கடையைத் திறந்து வைத்து காத்திருந்தனர். சர்வதேச சுற்றுலாத் தலமான மாமல்லபுரத்தில் மழையை வரவேற்று சுற்றுலாப் பயணிகள் ஆரவாரத்துடன் சிற்பங்களை கண்டு ரசித்தனர்.

## விவசாயிகள் மகிழ்ச்சி

ஸ்ரீபெரும்புதூர், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்துக்குள்பட்ட குன்றத்தூர், ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியங்களில் உள்ள கிராமப் பகுதிகளில் வெள்ளிக்கிழமை காலை முதல் தொடர்ந்து மழை பெய்து வருவதால் பொதுமக்களின் இயல்பு வாழ்கை பாதிக்கப்பட்டாலும், அவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## சோத்துப்பாறை அணை நிரம்பியது

பெரியகுளம் அருகே மேற்குப் பகுதியில் சுமார் 9 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது சோத்துப்பாறை அணை. அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழை காரணமாக, வெள்ளிக்கிழமை முதல் நிரம்பி வழிகிறது. இதனால் இப் பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அணையின் மொத்த உயரமான 126.28 அடிக்கு தண்ணீர் நிரம்பியுள்ளது. 100 மில்லியன் கன அடி தண்ணீர் உள்ளது. வினாடிக்கு 180 கனஅடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது. அணையிலிருந்து 180 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. இந்த அணைத் தண்ணீர் மூலம் பழைய ஆயக்கட்டு பகுதியில் 1825 ஏக்கர் நிலங்களும், புதிய ஆயக்கட்டு பகுதியில் 1040 ஏக்கர் நிலங்களுமாக மொத்தம் 2865 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

## விவசாயிகள் பயிர் காப்பீடு: ஆட்சியர் விளக்கம்

விருதுநகர் மாவட்ட விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு செய்வதற்கான விவரங்களை, சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் மூலம் எடுத்துரைக்கப்படும் என ஆட்சியர் விளக்கமளித்துள்ளார். விருதுநகர் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு ஆட்சியர் டி.என். ஹரிஹரன் தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் முனுசாமி, வேளாண்மை துறை இணை இயக்குநர் கருப்பையா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் அதிகாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் இடையே நடைபெற்ற விவாதம் வருமாறு:

கணபதிராஜ் (விவசாயி): பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் எந்தெந்த வகையான பயிர்களுக்கு காப்பீடு வழங்கப்படுகிறது? முறையாக பிரீமியம் தொகை செலுத்தியும் இத்தொகை கிடைப்பதாக தெரியவில்லை. இது குறித்து முழுமையான விவரங்களை விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டும். ராமச்சந்திரராஜா (மாவட்ட மா விவசாயிகள் சங்கத் தலைவர்): தற்போது மழைக் காலம் தொடங்கியுள்ளது. எனவே கிணற்றுப் பாசனம் மற்றும் மானாவாரியில் பயிர் செய்யப்பட்டுள்ள விவரங்களை அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த கிராம நிர்வாக அலுவலர்கள் முழு அளவில் கணக்கெடுப்புச் செய்ய வேண்டும். இதன் அடிப்படையிலேயே எவ்வித நிபந்தனையுமில்லாமல் பயிர் கடன்களை பெற முடியும். அதே போல் யூரியா மற்றும் கலப்பு உரங்கள் ஆகியவை கூடுதல் விலைக்கு விற்கப்படுகின்றன. அதை தடுத்து சரியான விலையில் கிடைக்க மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும், நரிக்குடி, வத்திராயிருப்பு, ஸ்ரீவில்லிபுத்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை விவசாயிகள் பேசும் போது, கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளுக்கு பயிர் கடன்கள் வழங்காமல் மறுத்து வருகின்றனர். பருவ மழை தொடங்கியிருப்பதால் வேளாண்மை பணிகள் செய்வதற்கு எளிதாக கடன் பெற மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றனர். இதற்கு ஆட்சியர் டி.என். ஹரிஹரன் பதிலளித்து

பேசுகையில், தேசிய வேளாண்மை திட்டத்தில் காப்பீடு செய்தவர்களுக்கு இழப்பீட்டு தொகை கிடைக்காதது தொடர்பாக, சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவன அதிகாரிகள் மூலம் விவரங்கள் தெரிவிக்கப்படும். இத்திட்டத்தில் பயன்பெறுவது குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கமாக எடுத்துரைக்கப்படும். உரங்கள் சரியான விலையில் விற்பனை செய்வது தொடர்பாக வேளாண்மை இணை இயக்குநர், டான்பெட் அதிகாரிகள் குழுவினர் மூலம் கண்காணிக்கப்பட உள்ளது என்றார் அவர். இதில், கூட்டுறவுத் துறை இணைப் பதிவாளர் குருமூர்த்தி, வனத் துறை கோட்ட அலுவலர் அசோக்குமார் உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## கரூரில் பரவலாக மழை

கரூரில் வெள்ளிக்கிழமை பரவலாக மழை பெய்தது. கரூரில் வெள்ளிக்கிழமை காலை வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. பிற்பகல் 2 மணியளவில் திடீரென மேக கூட்டங்கள் திரண்டன. பின்னர், குளிர்ந்த காற்று வீசத்தொடங்கி மழை பெய்தது. பிற்பகல் 3.10 மணி வரை பெய்த மழையால் சாலைகளில் மழைநீர் வெள்ளம்போல ஓடியது. இதையடுத்து மாலை 5.45 மணியளவில் மீண்டும் மழை பெய்யத் தொடங்கியது. இரவு 7 மணி வரை பெய்தது. கரூர் மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மாவட்டத்தில் வியாழக்கிழமை இரவு முதல் காலை 7 மணி வரை பெய்த மழையின் அளவு(மி.மீட்டரில்): அரவக்குறிச்சி 9.20, க. பரமத்தி 3.50, மாயனூர் 10, பாலவிடுதி 6.40, கடவூரில் 21.60, கிருஷ்ணராயபுரம் 12, மைலம்பட்டி 20 என மொத்தம் 82.70 மி.மீ. மழை பெய்துள்ளது.

## சீர்காழியில் பலத்த மழை

சீர்காழி பகுதியில் வெள்ளிக்கிழமை அதிகாலை முதல் பெய்த மழை பிற்பகல் ஒன்றை மணி நேரம் நீடித்தது. சீர்காழியில் கடந்த இரண்டு

நாட்களாக இரவில் மட்டும் லேசான மழை பெய்து வந்தது. இந்நிலையில் வெள்ளிக்கிழமை அதிகாலை முதல் மழை பெய்ய தொடங்கியது. இந்த மழை காலை 10.30 வரை நீடித்தது. இதனால் மாணவர்கள், அலுவலகம் செல்வோர், வியாபாரிகள் பாதிக்கப்பட்டனர். மாலையில் மீண்டும் பலத்த மழை பெய்தது. நகரின் பல்வேறு பகுதிகளில் தண்ணீர் சாலைகளில் தேங்கி நின்றது. தீபாவளியை முன்னிட்டு, கடைவீதி, மணிகூண்டு, பழைய,புதிய பேருந்து நிலையம் பகுதிகளில் இருந்த வணிகர்களுக்கு வியாபாரம் பாதிக்கப்பட்டது.

**அடுத்த 4 நாள்களுக்கு மழை பெய்ய வாய்ப்பு**

தற்போது நிலவும் வானிலை அடிப்படையில் நாமக்கல் மாவட்டத்தில் அடுத்த 4 நாள்களுக்கு மழை பெய்வதற்கான வாய்ப்பு நிலவுவதாக நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்த மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 4 நாள்களுக்கு (அக்.18 முதல் 21-ஆம் தேதி வரை) வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் சில இடங்களில் 4 மிமீ முதல் 8மிமீ வரை மழை பெய்யக் கூடும். காற்றின் திசைவேகம் மணிக்கு 3 கிமீ முதல் 4 கிமீ வேகத்தில் தென்கிழக்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 73.4 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 87.8 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 72 சதம் முதல் அதிகபட்சம் 88 சதம் வரைஇருக்கும். கோழிப் பண்ணையாளர்களுக்கு..: கோழி முட்டை உற்பத்திக்கு சாதகமான வானிலை தற்போது நிலவினாலும், புதிய வரவு தீவன மூலப்பொருள்களில் காணப்படும் அதிகப்படியான ஈரத் தன்மை, அவற்றை நீண்ட நாள்களுக்கு தரத்துடன் பாதுகாக்க முடியாத நிலையை ஏற்படுத்தும். தவிர, தீவனத்தின் ஈரத் தன்மையை அதிகரித்து, அவை பூஞ்சை நச்சுக்கு வழிகோலும். எனவே, தீவனத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பூஞ்சை நச்சு முறிவு, ஈரல் கண்டிக்ஷனர் மருந்துகளைச்

சேர்க்க வேண்டும். கோழியின நோய் ஆய்வகத்தில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், கோழிகள் பெரும்பாலும் மேல்மூச்சுக்குழாய் நோய், குடல்புண்களால் இறந்திருப்பது தெரிய வந்தது. எனவே, பண்ணையாளர்கள் தீவன மூலப்பொருள்களில் கிளாஸ்ட்ரிடியம் கிருமியின் மாசுபாடு உள்ளதா என ஆய்வு செய்து தரமான மூலப்பொருள்களை உபயோகிப்பதுடன் பண்ணை உயிர்ப் பாதுகாப்பு முறைகளை கடைப்பிடிக்கவும் வேண்டும். வேளாண் விவசாயிகளுக்கு..: வெள்ளாடுகளில் குட்டி இறப்பைத் தவிர்க்க குடல்புழு நீக்கம் மிகவும் அவசியம். 6 மாதம் வரை ஆட்டுக் குட்டிகளுக்கு இரு மாதங்களுக்கு ஒரு முறை குடல்புழு நீக்கம் செய்ய வேண்டும். ஆறு மாதங்களுக்கு பிறகு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அதாவது பருவ மழை தொடங்குவதற்கு முன்பு ஒரு முறையும், பருவமழையின் போது ஒரு முறையும், பருவ மழைக்குப் பிறகு ஒரு முறையும் கொடுக்க வேண்டும். தற்பொழுது உருளை, நாடாப்புழுக்களுக்கான மருந்தை அளிக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தொடர் மழை: ஒரு போக நெல் சாகுபடி பணிகள் மும்முரம்**

வலசை:மதுரையில் தொடர் மழை பெய்வதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். ஒரு போக நெல் சாகுபடி பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.வழக்கமாக அக்டோபரில் வடகிழக்கு பருவமழை பெய்யத் துவங்கும். கடந்தாண்டு அக்.,22ல் பெய்தது. இந்தாண்டு அக்.,20ல் துவங்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சில நாட்களாக மதுரையில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது.மதுரையில் சில ஆண்டுகளாக மழையின்றி தென்னை, கொய்யா, மா மரங்கள்

கருகின. இந்நிலையில் ஆறுதல் அளிக்கும் வகையில் முல்லை பெரியாறு அணை மற்றும் வைகை அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து வருகிறது. அணைகளின் நீர் மட்டம் உயர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. ஒரு போக சாகுபடிக்கான ஒரு லட்சம் ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில் அக்.,7 ல் அணை நீர் பாசனத்திற்கு திறந்து விடப்பட்டது. மழையால் மகிழ்ச்சி:பாலமேடு அருகேயுள்ள வலசை கிராம விவசாயி தினேஷ்: அணை நீரை பயன்படுத்தி விவசாயப் பணிகள் துவங்கியுள்ளன. எனினும் தொடர் மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். நெல் நாற்று நடவுப்பணி மும்முரமாக நடக்கிறது. நெல் நடவு முடிந்து மூன்று நாட்களுக்கு ஒரு முறை வயலில் தண்ணீர் தேக்க வேண்டும். நெற்கதிர் பால் பிடிக்க 60 நாட்கள் ஆகும். பெரியாறு, வைகை அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதியில் நல்ல மழை பெய்தால் மட்டுமே பயிரிடப்பட்ட நெல் அறுவடை செய்ய இயலும். இயற்கை அன்னை மனது வைத்தால் மட்டுமே இது சாத்தியம், என்றார்.

## 48 மணி நேரத்தில் வடகிழக்கு பருவமழை

சென்னை: 'சாதகமான வானிலை ஏற்பட்டுள்ளதால், தமிழகம், கேரளா, ஆந்திரா பகுதிகளில், 48 மணி நேரத்தில், வடகிழக்கு பருவமழை துவங்க வாய்ப்பு உள்ளது' என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்மேற்கு பருவமழை முழுவதுமாக நீங்க வேண்டும்; கிழக்கு திசையில் இருந்து காற்று வீச வேண்டும்; தமிழக கடலோர பகுதிகளில் பல இடங்களில் மழை பெய்ய வேண்டும். இவை தான், வடகிழக்கு பருவ மழையின் துவக்கமாக அறிவிக்கப்படும். இந்த வகையில், தற்போது தென்மேற்கு பருவமழை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இரு தினங்களில் முடிவடையும் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதற்கிடையில், வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள சாதகமான சூழல்கள், தமிழகம், கேரளா, ஆந்திரா, கர்நாடகா பகுதிகளில் வடகிழக்கு பருவமழை துவக்கத்திற்கான அறிகுறியாக கருதப்படுகிறது.

இதுகுறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் பாலச்சந்திரன் கூறியதாவது: சாதகமான சூழல் தமிழகம், கேரளா மற்றும் ஆந்திரா, கர்நாடகாவை ஒட்டிய பகுதிகளில், தென்மேற்கு பருவமழை முடிந்து, வடகிழக்கு பருவமழை துவங்குவதற்கான சாதகமான சூழல்கள் ஏற்பட்டுள்ளதால், 48 மணி நேரத்தில் பருவமழை துவங்க வாய்ப்புள்ளது. தற்போது, இலங்கை மற்றும் தமிழகத்தை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில், நிலவி வரும் காற்றழுத்தத்தின் காரணமாக, கடந்த, 24 மணி நேரத்தில், ராமநாதபுரம், தூத்துக்குடியில், 6; சிதம்பரத்தில், 5 செ.மீ., மழை அதிகபட்சமாக பதிவாகியுள்ளது.

மழைக்கு வாய்ப்பு

அடுத்த, 24 மணிநேரத்தில், தமிழகத்தின் பல இடங்களில் மழை பெய்யும். சென்னையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும்; சில பகுதிகளில் மழைக்கு வாய்ப்புள்ளது. இவ்வாறு, அவர் தெரிவித்தார். மேலும், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த இரு தினங்களுக்கு, சில பகுதிகளில் கனமழை பெய்யக் கூடும் என, வானிலை ஆய்வு மைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

**மத்திய அரசு முதன் முறையாக உருளைக்கிழங்கை இறக்குமதி செய்கிறது**



புதுடில்லி:உள்நாட்டில் சப்ளையை அதிகரித்து, விலை உயர்வை கட்டுப்படுத்தும் நோக்கில், மத்திய அரசு, முதன்முறையாக, உருளைக்கிழங்கை

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது.கடந்த சில வாரங்களாக, உருளைக்கிழங்கின் விலை ஏறுமுகமாகவே உள்ளது. சில்லரை விற்பனையில், ஒரு கிலோ உருளைக்கிழங்கின் விலை (டில்லி), 35 – 40 ரூபாய் என்ற அளவில் உள்ளது.இந்நிலையில், உள்நாட்டு சந்தைகளில், உருளைக்கிழங்கின் விலை உயர்வை கட்டுப்படுத்த, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக, மத்திய வேளாண் அமைச்சர் ராதா மோகன் சிங் தெரிவித்தார். இதுகுறித்து, வேளாண் செயலர் ஆசிஷ் பகுகுணா, மேலும் கூறும்போது:சப்ளையை அதிகரித்து விலையுயர்வை கட்டுப்படுத்த, உருளைக்கிழங்கை முதன் முறையாக, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான டெண்டர் 'நாபெட்' அமைப்பிடம் கோரப்பட்டுள்ளது.இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு, வரும் நவம்பர் இறுதியில், இந்தியாவை வந்தடையும்.குறிப்பாக, ஐரோப்பா மற்றும் பாகிஸ்தான் நாடுகளிலிருந்து, உருளைக்கிழங்கு இறக்குமதி செய்யப்படும். ஜனவரி வரையில் போதுமான சப்ளை இருப்பதை உறுதி செய்யும் வரை, இதன் இறக்குமதி தொடரும்.இவ்வாறு, பகுகுணா கூறினார்.2013 – 14ம் பருவத்தில், நம்நாடு 4.43 கோடி டன் உருளைக்கிழங்கை உற்பத்தி செய்தது. எனினும், இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2.3 சதவீதம் குறைவாகும்.

## மாவட்டத்தில் மழை விவசாயிகள் மகிழ்ச்சி

விழுப்புரம்: மாவட்டத்தில் நேற்று பரவலாக மழை பெய்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இந்தாண்டு தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவிற்கு பெய்யவில்லை. இதனால் மானாவாரி சாகுபடி செய்த பயிர்கள் வளர்ச்சியில்லாமல் இருந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவ மழை பொய்த்து போனதால் ஏரி, குளம், குட்டைகள் மற்றும் வரத்து கால்வாய்களில் போதிய நீர் தேங்கி நிற்காததால், நிலத்தடி நீர் மட்டமும் அதிகளவு குறைந்தது. இதனால் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டது. நேற்று முன்தினம் நள்ளிரவு முதல்

மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் தொடர்ந்து பரவலாக மழை பெய்கிறது. இதனால் விவசாயிகளும், பொது மக்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மேலும் கடந்த சில நாட்களாக புழுக்கம் அதிகம் இருந்த நிலையில், தொடர்ந்து மழை பெய்வதால், இரவு நேரங்களில் குளிர்ந்த காற்று வீசத் துவங்கியுள்ளது.

**<u>தீவன அபிவிருத்தி திட்டத்தில்மானியத்துடன் பயன்பெற அழைப்பு</u>**

குன்னூர்:குன்னூர் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் தீவனம் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. கால்நடைகளின் பராமரிப்பு செலவை குறைக்க பசுந்தீவனம் முக்கிய பங்கு வகிக்கிறது. இதனை தொடர்ந்து, பால் உற்பத்தியை பெருக்கவும், செலவை குறைக்கவும் சோளம், தட்டைப்பயிர், அகத்தி, அசோலா ஆகியவற்றை கறவை மாடுகளுக்கு வழங்கும் வகையில், மாநில அரசால் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு, கால்நடை வைத்து, மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் (ஆவின்) உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு மட்டும் தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பல்வேறு பொருட்கள் வழங்கப்பட்டு வந்தன. ஆனால், இவற்றில் ஏற்பட்ட பல்வேறு பிரச்னைகளால், இந்த திட்டம் கிடப்பில் போடப்பட்டது.இந்நிலையில், தற்போது கால்நடை வளர்ப்பவர்களை ஊக்குவிக்கும் வகையில், கால்நடை பராமரிப்பு துறை சார்பில், மீண்டும் தீவன திட்டம் செயல்படுத்தப்பட்டு, அனைவருக்கு இதன் பயன்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. இதன்படி, குன்னூர் பகுதியில் இதுவரை 60 பயனாளிகளுக்கு தீவனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில், உலர் தீவனமாக சோளத்தட்டு மற்றும் பிற பொருட்கள், பயனாளி ஒருவருக்கு 105 கிலோ வீதம் அரசு மானியத்தில், கிலோ 2 ரூபாய்க்கு வழங்கப்படுகிறது. நேற்று நடந்த நிகழ்ச்சியில், கால்நடை பராமரிப்பு துறை டாக்டர் சங்கர், கேத்தி கால்நடை டாக்டர் பார்த்தசாரதி ஆகியோர், 24 பேருக்கு மானியத்துடன் கூடிய

தீவனங்களை வழங்கினர். டாக்டர் சங்கர் கூறுகையில், ""குன்னூர் பகுதிகளில் 1 முதல் 5 வரை மாடுகளை வைத்துள்ளவர்கள் ரேஷன் கார்டுகளை கொண்டு வந்து, இத்திட்டத்தின் கீழ் மானியத்துடன் தீவனத்தை பெற்று பயன்பெறலாம்," என்றார்.

## திருச்செந்துறையில் நாளை சிறப்பு வாழைத்தார் ஏலம்

திருச்சி: தீபாவளி பண்டிகையையொட்டி, திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழை வளாகத்தில், நாளை சிறப்பு வாழைத்தார் ஏலம் நடக்கிறது. நாடு முழுவதும் வரும், 22ம் தேதி தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, விவசாயிகள் நலனுக்காக, திருசெந்துறை வாழை வளாகத்தில் காலை, 11 மணி முதல், 1 மணி வரை வாழைத்தார் ஏலம் நடக்கிறது. இதில், விவசாயிகளுக்கு எந்த விதமான கமிஷனும் இல்லாமல், உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. இதில், அந்தநல்லூர், மணிகண்டம், திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்ச நல்லூ ர், முசிறி, தொட்டியம் வட்டாரங்களை சேர்ந்த விவசாயிகள் மற்றும் டெல் டா மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் பங்கேற்கலாம். தகவலை திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை துணை இயக்குனர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

## சம்பா பருவத்தில் 10,500 ஹெக்டேரில் திருந்திய நெல் சாகுபடிக்கு இலக்கு

கரூர்: சம்பா பருவத்தில், கரூர் மாவட்டத்தில், 10,500 ஹெக்டேரில் திருந்திய நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என, கலெக்டர் ஜெயந்தி தெரிவித்தார். கரூர் கலெக்டர் அலுவலகத்தில் நடந்த விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் கலெக்டர் ஜெயந்தி, கூறியதாவது: கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு, 652.2 மி. மீ., ஆகும். அக்டோபர் மாதம் முடிய சராசரி மழையான, 493.7 மி.மீ., பதில், நடப்பு மாதம் வரை, 298.2 மி.மீ., மழை கிடைக்கப்பெற்றுள்ளது. சராசரி மழையளவை காட்டிலும், 40 சதவீதம் குறையாக

பெறப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும், மழை பெய்துள்ளதால் மானாவாரி பயிர்களான சோளம், கம்பு, நிலக்கடலை, எள் மற்றும் பயறு வகை பயிர், 13 ஆயிரத்து, 968 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு, பயிர்கள் வளர்ச்சி நிலையில் உள்ளது. வாய்க்கால் மற்றும் கிணற்று பாசனத்தை கொண்டு, சம்பா பருவ நெல் நடவு மேற்கொள்ளப் பட்டுள்ளது. அக்டோபர் மாதம் இறுதிக்குள், 15 ஆயிரத்து, 400 ஹெக்டேர் பரப்பில், சம்பா பருவ நெல் சாகுபடிக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றில், 10 ஆயிரத்து, 500 ஹெக்டேரில் திருந்திய நெல் சாகுபடி முறையில் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது. அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருந்து, இதுவரை, 148 மெட்ரிக் டன் சான்று பெற்ற நெல் விதைகள் மானிய விலையில், 2,800 பயனாளிகளுக்கு வினியோகம் செய்யப்பட்டுள்ளது. தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ், பயறு உற்பத்தியை பெருக்கிட, துவரை நாற்று விட்டு நடுவதற்காக, 345 விவசாயிகளுக்கு, 50 சதம் மானியத்தில், 345 ஹெக்டேரில் செயல் விளக்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன. தமிழக முதல்வரின் சிறப்பு திட்டமான பாசனத்துக்கு சோலார் பம்புடன் நுண்ணீர் பாசன வசதி அமைத்து கொடுக்கும் திட்டத்தின் கீழ், 75 எண்களுக்கு பணி ஆணை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில், இதுவரை மூன்று விவசாய கிணறுகளில் பாசன வசதி மேற்கொள்ள சோலார் பம்பு அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. 2014-15 ம் ஆண்டு மூலிகை பயிர் சாகுபடி திட்டத்தில் காந்தல் மலர் சாகுபடிக்கு, 50 சதம் மானியமாக ஹெக்டேருக்கு, 68 ஆயிரத்து, 750 ரூபாயும், கோலியஸ் சாகுபடிக்கு, 20 சதம் மானியமாக எக்டருக்கு, 8,600 ரூபாய், நித்ய கல்யாணி சாகுபடிக்கு, 20 சதம் மானியமாக ஹெக்டேருக்கு, 5,000 ரூபாய் வழங்கப்படும். நடப்பாண்டு திட்டத்துக்காக, 48 லட்சம் ரூபாய் நிதி பெறப்பட்டுள்ளது. மூலிகை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் உரிய

ஆவணங்களுடன், வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனரை தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என்று அவர் கூறினார்.

**<u>தஞ்சாவூர் மாவட்டத்தில் 103 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறப்பு</u>**

தஞ்சாவூர்: தஞ்சாவூர் மாவட்டத்தில் புதிதாக, 103 நேரடி கொள்முதல் நிலையங்கள் திறந்து, விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. இதுவரை, 124 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து தமிழ்நாடு நுகர்ப்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் முகம்மது பாதுஷா வெளியிட்டுள்ள அறிக்கையில்: தஞ்சாவூர் மாவட்டத்தில் நடப்பு காரிப் பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள குறுவை நெல் அறுவடை மும்முரமாக நடந்துவருகிறது. விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்ய வசதியாக, தமிழ்நாடு நுகர்ப்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில், விவசாய நிலங்களை ஒட்டியுள்ள கிராமப் பகுதிகளில், புதிதாக, 103 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, நெல் கொள்முதல் நடக்கிறது. மேலும், கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு உரிய ஆதார விலையை உடனுக்குடன் அதாவது, 24 மணி நேரத்துக்குள் விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது. நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலமாக விவசாயிகளிடமிருந்து அக்டோபர், 15ம் தேதி முடிய, 124 மெ.டன் குறுவை நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நெல் கொள்முதல் செய்வதிலும், பணம் பட்டுவாடா செய்வதிலும் இடர்பாடுகள் மற்றும் காலதாமதம் ஏதேனும் ஏற்பட்டால், தஞ்சை தாலுகா பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், 04362- 235823, கும்பகோணம் விவசாயிகள், 0435-2415207, பட்டுக்கோட்டை விவசாயிகள், 04373-235080 ஆகிய டெலிஃபோன் எண்களில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தை தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம் என தெரிவித்துள்ளார்.

## சோத்துப்பாறை அணை 17வது முறையாக நிரம்பியது

பெரியகுளம்:கொடைக்கானல் மலைப்பகுதியில் "ஜோராக' மழை பெய்வதால் சோத்துப்பாறை அணை 17 வது முறையாக நிரம்பி வழிகிறது. கொடைக்கானல் மலைப்பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்வதால் சோத்துப்பாறை அணை நீர் மட்டம் ஏறுமுகமாக இருந்தது. அணையின் மொத்த உயரம் 126 அடி. அணையின் நீர் மட்டம், செப்.,22ல் 25 அடியாக இருந்தது. கொடைக்கானல் மலைப்பகுதியில் சாரல் மழை மற்றும் அவ்வப்போது கனமழை பெய்து வருவதால் அக்.,14ல் 100 அடியை தொட்டது. அக்.,15ல் 15 அடி உயர்ந்து 115 அடியானது. 16ல் 121.3 அடியாக உயர்ந்தது. நேற்று அணை 126 அடி உயரமும் நிரம்பி மறுகால் பாய்கிறது. அணைக்கு வினாடிக்கு 180 கன அடி நீர் வரத்து உள்ளது. "17 வது முறை 17ம் தேதி': சோத்துப்பாறை அணை 2001ம் ஆண்டு பாசனத்திற்கு திறக்கப்பட்டது. 2005, 2012, 2013 ம் ஆண்டு முறையே, அணை இருமுறை நிரம்பியது. இது வரை 16 முறை நிரம்பியுள்ளது. நேற்று (அக்.,17ல்) நிரம்பியது 17 வது முறையாகும். அணை நிரம்பிய எண்ணிக்கையும், அணை நிரம்பிய தேதியும் ஒன்றாக அமைந்தது. ஒவ்வொரு முறையும் அணை நிரம்பும் போதும், சோத்துப்பாறையில் மழையளவு குறைந்தது 4 மி.மீ., 10 மி.மீ., ஆக இருக்கும். ஆனால் தற்போது அணைக்கு நீர் வரத்து 180 கனஅடி வரும் நிலையில் மழையளவு 18 மி.மீ., என உயர்ந்துள்ளது. தமிழக அரசுக்கு தெரிவிப்பு: அக்.,15ல் நிரம்பிய மஞ்சளாறு அணை, அக்.,17ல் நிரம்பிய சோத்துப்பாறை அணை விபரங்களை, பொதுப்பணித்துறை அதிகாரிகள், சென்னை முதன்மை பொறியாளருக்கு தெரிவித்துள்ளனர். இரு அணைகளும் நிரம்புவதற்கு முன்பே அக்.,27ம் தேதி பாசனத்திற்கு திறக்கப்படும், என கடந்த வாரம் பரிந்துரைக்கப்பட்ட நிலையில் அணை நிரம்பி மறுகால் பாய்வதால் அதற்கு முன்பே அதாவது தீபாவளிக்கு பிறகு ஓரிரு நாட்களில் திறப்பதற்கு வாய்ப்பு உள்ளதாக தெரிகிறது. ஆயக்கட்டு

தாரர்களுக்கு தீபாவளி: அணையில் நீர் மட்டம் உயர்ந்து, அணை நிரம்பியதால் பழைய ஆயக்கட்டு பகுதிகளான பெரியகுளம் கண்மாய், தாமரைக்குளம் கண்மாய், பாப்பிபட்டி கண்மாய்களில் உள்ள 1,892 ஏக்கர் விவசாய நிலங்களும். நூற்றுக்கணக்கான ஏக்கர் மறைமுகமான விவசாய நிலங்களும் பயன்பெறும். புதிய ஆயக்கட்டு பகுதிகளான லட்சுமிபுரம் பகுதிகளில் உள்ள 1040 ஏக்கர் விவசாய நிலங்களும் பயன்றுபெறும். நூற்றுக்கணக்கான கிணறுகளின் நீர் மட்டம் உயரும். அணை நிரம்பி மறுகால் பாய்வதால், வராகநதியில் சாக்கடை நீர் அடித்து செல்லப்பட்டு, மழைநீர் செல்கிறது.

## <u>பருவ மழையால் விவசாயிகள்...மகிழ்ச்சி:நடவுப்பணிகளில் ஆர்வம்</u>

ஆர்.எஸ்.மங்கலம்:பருவமழை கைகொடுத்து வருவதால் ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். திருவாடானை தாலுகாவிற்கு உட்பட்ட ஆர்.எஸ்.மங்கலம், ஆனந்தூர், சோழந்தூர், திருவாடானை, தொண்டி உள்ளிட்ட சுற்றுப்புற பகுதிகளிலும் கடந்த மாதத்தில் சுமார் 49ஆயிரத்து 950 ஹெக்டேரில் நெல் விதைப்பு செய்யப்பட்டது. 95 நாட்கள் முதல் 110 நாட்களில் விளைச்சல் தரக்கூடிய டீலக்ஸ் பொன்னி, ஜே.சி.எல்,ஜோதி போன்ற நெல் ரகங்கள் அதிகளவில் விதைப்பு செய்யப்பட்டன. லேசான ஈரப்பதத்தை பயன்படுத்தி நம்பிக்கையுடன் விதைப்பு செய்த விவசாயிகளுக்கு, விதைப்பு செய்த பின் போக்குகாட்டிய பருவமழையால் நெல் வயல்களில் நெல்பயிர்கள் மண்ணை விட்டு வெளிவரமுடியாமல் வெப்பிவிடும் நிலை இருந்தது. இதனால் விவசாயிகள் பருவமழையை எதிர்பார்த்து கவலையுடன் காந்திருந்தனர். இந்நிலையில் தாலுகாவில் கடந்த இரண்டு நாட்களாக பெய்துவரும் தொடர் மழையால் நெற்பயிர்கள் குளிர்ந்துள்துடன், விவசாயிகளின் மனசும் குளிர்ந்து விவசாயபணிகளை தீவிரப்படுத்தி வருகின்றனர். திருவாடானை, ஆனந்தூர், ஆர்.எஸ்.மங்கலம், கூடலூர், திருத்தேர்வளை, ராதானூர், சனவேலி, உப்பூர் உள்ளிட்ட சுற்றுப்புற

பகுதிகளில் நெற்பயிர்களை களைகளில் இருந்து காப்பாற்ற களைக் கொல்லி மருந்துகள் தெளிக்கப்பட்டு வருகின்றன. ஒரு சில பகுதிகளில் நெற்பயிர்களுக்கு தேவையான உரம் இடப்பட்டு வருகிறது. மேலும் வயலில் தேங்கியுள்ள மழை நீரை பயன்படுத்தி நடவு பணிகளையும் துவங்கியுள்ளனர். ஆர்.எஸ்.மங்கலம் விவசாயி முத்து,சுப்பையா ஆகியோர் கூறியதாவது: சில நாட்களாக பெய்துவரும் மழை நெற்பயிருக்கு ஏற்றதாக அமைந்துள்ளது. நெற் பயிர்களுக்கு போதிய தண்ணீர் உள்ள வயல்களில் உரம் இடப்படுகிறது. களைபறித்தல், நடவுசெய்தல் உள்ளிட்ட விவசாய பணிகளை செய்துவருகிறோம். இந்த ஆண்டு பாதிப்பின்றி பயிர்கள் அறுவடைக்கு தயாராகிவிடும் என்ற நம்பிக்கை வந்துள்ளது, என்றனர். மாவட்டத்தில் தொடர் மழை :மாவட்டத்தின் பல இடங்களில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. கடலோர பகுதிகளில் லேசான மழை பெய்துள்ளது. நேற்று காலை 8.30 மணி நிலவரப்படி (மி.மீ.,) ராமநாதபுரம் 61.70, தொண்டி 50.30, ஆர்.எஸ்.மங்கலம் 49, வட்டாணம் 43, பள்ளமோர்குளம் 32, தீர்த்தாண்டதானம் 29, திருவாடானை 25.20, கமுதி 24.70, தங்கச்சிமடம் 20, பரமக்குடி 18, பாம்பன் 15.10, முதுகுளத்தூர் 15, ராமேஸ்வரம் 12.20, கடலாடி 5.40, வாலிநோக்கம் 4.40 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. நேற்றும் காலை முதல் மாவட்டத்தில் பரவலாக தொடர்ந்து மழை பெய்தது.

**<u>உழவு பணி மும்முரம் இயற்கை உரத்தில் ஆர்வம்</u>**

கீழக்கரை:திருப்புல்லாணி சுற்றுவட்டாரப்பகுதிகளில் சமீபத்தில் பெய்த மழையால் காய்ந்த நிலங்களில் ஈரப்பதம் இருந்தது. இதனால் டிராக்டர் மற்றும் ஏர்கலப்பை கொண்டு உழவு செய்யும் பணிகள் தொடங்கி யுள்ளது. நெல், எள், நிலக்கடலை மற்றும் பயறுவகைகள் என மண்ணின் தன்மைக்கேற்ப சாகுபடிகள் செய்யப்படுகின்றன. இந்த ஆண்டு மழை முழுமையாக கைகொடுக்கும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் களம் இறங்கியுள்ளனர். குத்துக்கல்வலசை விவசாயி மாரி கூறுகையில்,

""பெரும்பாலும் ஆட்டுக்கழிவுகள், மாட்டுச்சாணம், மண்புழு உரம் போன்ற இயற்கை உரங்கள் கைகொடுக்கின்றன. மானாவாரி பயிர்கள் இப்பகுதியில் விளைவிக்கப்படுகின்றன. ஓரளவிற்கு ஊரணி, குளங்கள் நிரம்பியுள்ளன. பயிர்களை காப்பாற்றுவதற்கான மழையினை எதிர்பார்த்துக்காத்திருக்கிறோம் மழையை வைத்தே மகசூலை பெருக்கமுடியும்," என்றார்.

**<u>மழை விவசாயிகளை வாழ வைக்குமா:திருப்புவனத்தில் 3 மணி நேரம் தொடர் மழை</u>**

திருப்புவனம்:திருப்புவனத்தில் நேற்று காலை ஆறு மணி முதல் 9 மணி வரை பலத்த மழை பெய்தது. வழக்கமாக செப்டம்பர் முதல் தேதியில் இருந்து வடகிழக்கு பருவமழை தொடங்கும். இந்தாண்டு வெயிலின் தாக்கம் தான் இருந்தது. வானிலை ஆய்வு மையமும் 20ம் தேதிக்கு மேல் வடகிழக்கு பருவ மழை பெய்யும் என அறிவித்தது. ஆனால் நேற்று காலை முதல் வானம் மேகமூட்டமாகவே இருந்தது. ஆறு மணிக்கு மேல் மழை பெய்ய தொடங்கியது. அதிகாலை முதலே மழை பெய்ய தொடங்கியதால் பலர் சிரமப்பட்டனர். பள்ளி,அலுவலகம் செல்ல பலர் சிரமப்பட்டனர். தொடர்ந்து மூன்று மணி நேரம் மழை பெய்ததால் பல இடங்களில் சிறு சிறு விபத்துக்கள் ஏற்பட்டன. மழை காரணமாக லாடனேந்தலில் தனியார் பஸ், அரசு பஸ் மோதிக்கொண்டன. பயணிகளுக்கு காயம் ஏதுமில்லை, மின்வாரிய அலுவலகம் அருகே தனியார் பள்ளி வாகனம் மழைகாரணமாக சாலையோர பள்ளத்தில் சிக்கி கொண்டது. விவசாயிகள் கூறுகையில் இந்த மழை தொடர்ந்து பெய்தால் சம்பா பயிருக்கு மிகவும் ஏதுவாக இருக்கும். கோடை மழை ஏமாற்றி விட்டது. வடகிழக்கு பருவமழையாவது கை கொடுக்கும் என நம்பி நாற்று பாவியுள்ளோம். தொடர்ந்து வடகிழக்கு பருவ மழை கைகொடுத்தால் விவசாயம் செழிக்கும். என்றனர். ராஜபாளையம்: கருப்பு திராட்சை வரத்து அதிகரித்ததால் கிலோ 20 ரூபாய்க்கு ,ராஜபாளையத்தில்

விற்கப்படுகிறது.கருப்பு திராட்சை வெயில்காலங்களில் கிலோ 60 ரூபாய் முதல் 100 வரை விற்பனையாகும். மழை காலம் துவங்கியதால் கடந்த மாதம் கிலோ 40 ரூபாய் முதல் 60 வரை விற்பனையானது. ஹூட் புயலை அடுத்து தமிழகத்தின் பல பகுதிளில் மழை பெய்தது. இதனால் கருப்பு திராட்டை விலை குறைந்து உள்ளது. ராஜபாளையம் தென்காசி ரோட்டில், தள்ளுவண்டியில் கிலோ 20 ரூபாய்க்கு விற்பனையாகிறது. வியாபாரி முருகன், "" மலை பிரதேசங்களில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருவதால் திராட்சை வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் கிலோ 20 ரூபாய்க்கு விற்கப்படுகிறது," என்றார்.

## நெல்லையில் பருவமழை நாங்குநேரியில் அதிகபட்சம்

திருநெல்வேலி: நெல்லை மாவட்டத்தில் நேற்று பலத்த மழை பெய்தது.திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக லேசாக பெய்த மழை நேற்றுமுன்தினம் இரவில் கொட்டித்தீர்த்தது. நேற்றும் மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. வடகிழக்கு பருவ மழை சற்று முன்னதாகவே துவங்கிவிட்டதாக தெரிகிறது. இதனால் பாபநாசம், மணிமுத்தாறு<, சேர்வலாறு உள்ளிட்ட அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்தது. அதிகபட்சமாக நாங்குநேரியில் 156 மி.மீ.,யும் அம்பாசமுத்திரத்தில் 32, களக்காட்டில் 69, மூலைக் கரைப்பட்டியில் 42 மி.மீ.,சேரன்மகாதேவியில் 23 மி.மீ.,மழை பதிவாகியது.கடந்த ஜூன், ஜூலையில் பெய்ய வேண்டிய தென்மேற்கு பருவ மழை போதிய அளவு பெய்யாமல் பொய்த்துவிட்டதால் மாவட்டத்தில் கார் பருவ நெல்சாகுபடி முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை. எனவே வடகிழக்கு பருவமழையை எதிர்நோக்கி காத்திருக்கின்றனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கறிக்கோழி விலை அதிகரிப்பு**



கோவை: புரட்டாசி மாதம் முடிந்து விட்டதால், கறிக்கோழி விலை உயர துவங்கியுள்ளது. கறிக்கோழி பண்ணை கொள்முதல் விலை கடந்த ஒரு மாதமாக கிலோவிற்கு ஓரிரு ரூபாய் ஏற்ற இறக்கத்துடன் நிலவியது. கடந்த 13ம் தேதி ரூ.76 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் 16ம் தேதி ரூ.78 ஆக உயர்ந்தது. அதனடிப்படை யில் சில்லரை விற்பனை நிலையங்களில் உயிருடன் கறிக்கோழி கிலோ ரூ.93 ஆகவும், தோலுடன் கறி ரூ.125 ஆகவும், தோல் நீக்கிய கறி ரூ.145 ஆகவும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. கடந்த ஒரு மாதமாக புரட்டாசி விரதம் கடைபிடிக்கப் பட்டதால், கறிக்கோழி விற்பனை குறைந்திருந்தது. நேற்றுடன் புரட்டாசி மாதம் முடிந்ததால், கறிக்கோழி விற்பனை அதிகரிக்கும் என்பதால் அதன் விலை உயர்ந்துள்ளது என்று உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

**மதுராந்தகத்தில் தொடர் மழை**

மதுராந்தகம், : மதுராந்தகம் மற்றும் அதன் சுற்று பகுதிகளில் நேற்று காலை முதல் இரவு வரை விட்டுவிட்டு தொடர் மழை பெய்தது. இதனால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். மதுராந்தகம், கருங்குழி, அச்சிறுபாக்கம்,

சித்தாமூர் மற்றும் அதனை சுற்றியுள்ள ஏராளமான கிராமங்களில் நேற்று காலை முதல் இரவு வரை தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்தது. சில நேரங்களில் பலத்த மழையும், பல நேரங்களில் லேசான தூறலும் என நாள் முழுவதும் மழை விட்டு விட்டு பெய்து வந்தது. இதனால் வறண்டு கிடந்த ஏரி, குளங்கள் நிரம்ப வாய்ப்புள்ளது. இதே மழை தொடர்ந்து நீடித்தால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைவர்.

## <u>விவசாயிகள் குறைதீர் கூட்டம்</u>

காஞ்சிபுரம், :காஞ்சிபுரம் மாவட்ட கலெக்டர் சண்முகம் வெளியிட்ட அறிக்கையில்கூறியிருப்பதாவது: காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் இன்று காலை 11 மணிக்கு கலெக் டர் அலுவலக வளாகத்தில் ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் நடைபெறுகிறது. இந்த கூட்டத்தில் வேளாண்மை துறை மற்றும் சார்பு துறை அலுவலர்கள் கலந்து கொள்கிறார்கள். மாவட்டம் முழுவதும் உள்ள விவசாயிகள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள குறைகள் மற்றும் கோரிக்கை களை நேரடியாக கலந்து கொண்டோ அல்லது மனுக்கள் மூலமாகவோ தெரிவித்து பயன்பெற வேண்டும் என கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

## <u>கரூரில் தொடர் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி</u>

கரூர், : கரூர் மாவட்டத்தில் நேற்று தொடர்ந்து மழை கொட்டியது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 652.2 மிமீ. அக்டோபர் சராசரிமழையைவிட 40சதவீதம் குறைவான அளவே பதிவாகியுள்ளது. இந்தாண்டு ஜனவரி, பிப்ரவரி, கோடை மழைபெய்யவில்லை. ஜனவரியில் 0.25 மிமீ ஏப்ரலில் 0.29மிமீ அளவும் பதிவா னது. மே மாதத்தில் 112.73 மிமீ, ஜூன் 23.79 மிமீ, ஜூலை 2.73 மிமீ, ஆகஸ்டு 74.68, அளவுக்குத்தான் மழை பொழிந்துள்ளது. மொத்தம் 214.81மிமீ மழைதான் ஆகஸ்டு வரை பெய்துள்ளது. இதில் தென்மேற்கு பருவமழை 112மிமீ தான்

பெய்துள்ளது. கடந்தாண்டு தென்மேற்கு பருவமழை 176 மிமீ பெய்தது. கடந்தாண்டை விட கரூர் மாவட்டத்தில் மழைபொழிவு குறைந்து விட்டதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். இந்நிலையில் நேற்றுமுன்தினம் ஓரளவு மழைபெய்தது. மழை அளவு விபரம்: அரவக்குறுச்சி 9.20மிமீ, க.பரமத்தி 3.50, மாயனூர் 10, கடவூர் 21.60, கிருஷ்ணராயபுரம் 12, மயிலம்பட்டி 20, கரூர், குளித்தலை, அணைபாளையம், தோகமலை, பஞ்சப்பட்டி, ஆகிய மையங்களில மழை அளவு பதிவாகவில்லை. சராசரியாக 6.89 மிமீ மழை பெய்துள்ளது.

நேற்று காலை முதலே மாவட்டம் முழுவதும் தொடர்ந்து மழை பெய்தது. இடியுடன் காலை முதல் இரவு வரை விட்டு விட்டு மழை பெய்துகொண்டே இருந்தது. தொடர்ந்து மழைபெய்து இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். லாலாப்பேட்டை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதி அனைத்தும் முழுக்க, முழுக்க விவசாயம் சார்ந்த பகுதியாகும். இதில் புணவாசிப்பட்டி, மத்திப்பட்டி, வேங்காம்பட்டி, வயலூர், அந்தரப்பட்டி, பஞ்சப்பட்டி உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் வானம் பார்த்த பூமியைதான் அதிகபடியான விவசாயிகள் நம்பி உள்ளனர். இதனால் கடந்த ஆண்டு சரிவர பருவமழை இல்லாததால் விவசாயிகள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி வந்தனர். இதை தொடர்ந்து லாலாப்பேட்டை, புதுபட்டி, பழையஜெயங்கொண்டம் ஆகிய பகுதிகளில் மழை வேண்டி பெண்கள் கூட்டம் கூட்டமாக ஒப்பாரி போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். கடந்த இரண்டு நாட்களாக லேசான மழை தொடர்ந்து காலை, மாலை லேசான மழை பெய்து வருகிறது. இதனால் தாழ்வான பகுதியில் மழைநீர் தேங்கி உள்ளது. இதனால் வெற்றிலை, வாழை விவசாயிகள், மானாவாரியை மட்டுமே நம்பி இருக்கும் அனைத்து விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**<u>கரூர் மாவட்டத்தில் 10,500 எக்டேரில் திருந்திய நெல் சாகுபடி செய்ய திட்டம் கலெக்டர் பேச்சு</u>**

கரூர், : கரூர் மாவட்டத்தில் 10,500 எக்டேரில் திருந்திய நெல் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என்று கலெக்டர் கூறினார். கரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்றது. கலெக்டர் ஜெய ந்தி தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவ லர் அருணா, வேளாண் இணை இயக்குனர் தெய்வேந்திரன், கூட்டுறவு இ¬ ணப்பதிவாளர் சந்தானம் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கலெக்டர் ஜெயந்தி பேசியதாவது: கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 652.2 மிமீ. அக்டோபர் மாதம் முடிய கிடைக்கவே ண்டிய சராசரி மழையான 493.7 மிமீக்கு நடப்பு மாதம் வரை 298.2 மிமீ மழை மட்டுமே கிடைக்கப் பெற்றுள்ளது. அதாவது சராசரி மழை அளவைக்காட்டிலும் 40சதவீதம் குறைவாகவே பெறப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் மழை பெறப்பட்டுள்ளதால் மானாவாரி பயிர்களான சோளம், கம்பு, நிலக்கடலை, எள் மற்றும் பயறு வகை பயிர்கள் 13ஆயிரத்து968 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு பயிர்கள் வளர்ச்சி நிலையில் உள்ளன. வாய்க்கால், கிணற்றுப் பாசனத்தை கொண்டு சம்பா பருவ நெல்நடவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அக்டோபர் இறுதிக்குள் 15ஆயிரத்து 400 எக்டேர் பரப்பில் சம்பா பருவ நெல்சாகுபடிக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றில் சுமார் 10ஆயிரத்து 500, எக்டேரில் திருந்திய நெல் சாகுபடி முறையில் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது. அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருந்தும் இதுவரை 148 டன் சான்றுபெற்ற நெல் விதைகள் மானிய விலையில் 2800 பயனாளிகளுக்கு விநியோ கம் செய்யப்பட்டுள்ளது. தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின்கீழ் பயறு உற்பத்தியை பெருக்கிட துவரை

நாற்றுவிட்டு நடுவதற்காக 345 விவசாயிகளுக்கு 50சதம் மானியத்தில் 345 எக்டேரில் செயல் விளக்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. முதல்வரின் சிறப்பு திட்டமான பாசனத்திற்காக சோலார் பம்புகள் உடன் நுண்ணீர் பாசன வசதி அமைத்துக்கொடுக்கும் திட்டத்தின் கீழ் 75 பணிநியமன ஆணை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில் இதுவரை 3விவசாயிகள் கிணறுகளில் பாசனவசதி மேற்கொள்ள சோலார் பம்பு அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது. தோட்டக்கலைத்துறை நடப்பாண்டு மூலிகை பயிர் சாகுபடி திட்டத்தில் காந்தல் மலர் சாகுபடிக்கு 50சதவீதம் மானியமாக எக்டேருக்கு ரூ.68,750 ம், கோலியஸ் சாகுபடிக்கு 20சதவீதம் மானியமாக ரூ.8600 ம், நித்ய கல்யாணி சாகுபடிக்கு 20சதம் மானியமாக எக்டேருக்கு ரூ.5ஆயிரம் சாகுபடியாளர்களுக்கு வழங்கப்படும். நடப்பாண்டு இத்திட்டத்திற்காக ரூ.48.75 லட்சம் நிதி பெறப்பட்டுள்ளது. மூலிகை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் உரிய ஆணவங்களுடன் தங்கள் வட்டார தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனரை தொடர்புகொண்டு பயன்பெறலாம். இவ்வாறு கலெக்டர் கூறினார்.

## புதுக்கோட்டையில் மழை விவசாயிகள் மகிழ்ச்சி

புதுக்கோட்டை, : புதுக்கோட்டையில் நேற்று காலை முதல் பலத்த மழை பெய்து வருவதால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் கடந்த சில வாரங்களாக வெயில் கொளுத்தி வந்தது. இந்நிலையில் நேற்று காலை முதலே பலத்த மழை பெய்ய துவங்கியது. காலை 6 மணிக்கு பெய்த மழை இடைவிடாது 7.30 மணி வரை பெய்தது. பின்னா; அவ்வப்போது திடீரென பலத்த மழை கொட்டி யது. இதனால் புதுக் கோட்டை நகரின் சாலைகளில் மழைநீர் ஓடியது. மேலும் சாலை ஓரங்களிலும் நடுவிலும் உள்ள பள்ளங்களில் மழை நீர் தேங்கி நின்றது.

கடந்த சில நாட்களாக தொடரும் மழையினால் நகரிலும், சுற்றுவட்டார கிராமங்களிலும் உள்ள குளங்களிலும் நீர் நிரம்ப துவங்கியுள்ளது. தொடர்ந்து இதே போல் மழை பெய்து வந்தால் விவசாய பணிகளை துவங்கிடலாம் என விவசாயிகளும், வெப்பம் தணிந்து குளிர்ந்த வானிலை நிலவியதால் பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்தனர்.

திருமயம்:திருமயம் பகுதியில் நேற்று காலையில் இருந்து மாலை 4 மணிவரை பலத்த மழை கொட்டி யது. இதனால் மழைநீர் வரத்து வாய்க்கால் மூலம் ஏரிகளுக்கு சென்றடைந்தது. மேலும் கடந்த 10 நாட்களாக திருமயம் பகுதியில் மழை விட்டு விட்டு பெய்து வருகிறது. நேற்று பலத்த மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

**<u>சம்பா நெல்சாகுபடிக்கு மேலுரம்</u>**

அறந்தாங்கி,: சம்பா நெல் சாகுபடிக்கு மேலுரம் இடுவதற்கு இதுவே தகுந்த தருணம் என அறந்தாங்கி வேளாண்மை உதவி இயக்குனர் பொன்னையா தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: அறந்தாங்கி வட்டாரம் காவிரி மேட்டூர் பாசன பகுதிகளில் தற்பொழுது நல்ல மழை பெய்து வருகிறது. இதுவே முதல் மேலுரம் இடுவதற்கு தக்க தருணம் ஆகும். நெல் வளர்ச்சி பருவத்தில் தூர் கட்டும் நேரத்தில் தூர்கள் அதிகளவில் வெடிக்கவும் வேரின் வளர்ச்சி அதிகமாகவும் தற்போது அறந்தாங்கி, சுப்பிரமணியபுரம், அத்தாணி ஆகிய வேளாண்மை விரிவாக்க மையங்களில போதுமான அளவு நெல் நுண்சத்துக்கள் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 50 சதவித மானிய விலையில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அதனை ஏக்கருக்கு 5 கிலோ அளவில் 25 கிலோ மணலுடன் கலந்து மேலே சீராக தூவவேண்டும். மேலும் மேலுரம் இடும் விவசாயிகள் தழைச்சத்து கிடைக்க ஏக்கருக்கு 22 கிலோ யூரியாவை நன்கு தூள் செய்யப்பட்ட 5 கிலோ வேப்பம் புண்ணாக்குடன் கலந்து ஒரு நாள் வைத்திருக்கவும்.

வேப்பம் புண்ணாக்கில் உள்ள கசப்பு தன்மையை கொண்ட நிம்பிசிடின் என்ற வேதிப்பொருள் யூரியாவில் மேல் பரப்பு முழுவதும் ஒரு முலாம் பூசியதை போல செய்யப்பட்டு யூரியா விரைவில் நீரில் கரையாமல் தடுத்து பயிர் மெதுவாக எடுப்பதற்கு ஒரு கிரியா ஊக்கியை போல் செயல்படுகிறது. இதனுடன் சாம்பல் சத்து கிடைக்க 15 கிலோ பொட்டாஷ் உரம் கலந்து இடவேண்டும். தழைசத்து, சாம்பல்சத்து, வேப்பம் புண்ணாக்கு கலந்து இடுவதால் பயிர்கள் ஒளிச்சேர்க்கைக்கு தேவையான கரியமில வாயு கிடைக்க வழி செய்கிறது. இதனால் பயிர்கள் செழித்து வளர்ந்து காற்றில் உள்ள தழைச்சத்தையும் கிரகிக்கிறது. பயிர்களில் வேர் வளர்ச்சி அதிகரிப்பதால் மண்ணில் உள்ள அங்கக சத்துக்களை மிகவும் அதிக அளவில் உறிஞ்சப்பட்டு பயிரின் வளர்ச்சி அதிகரிக்கிறது. இதனால் வறட்சியும் தாங்குகிறது. மேலும் வேப்பம் புண்ணாக்கு இடுவதால் பூச்சி தாக்குதல் குறைக்கப்பட்டு பயிரின் வளர்ச்சி ஊக்குவிக்கப்படுகிறது மற்றும் மண்ணிலுள்ள நுண்ணுயிர் செயல்பாட்டினையும் அதிகப்படுத்துகிறது எனத்தெரிவித்துள்ளார்.

## <u>கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் முதல்?போக?நெல்?அறுவடை?தீவிரம்</u>

கம்பம், : கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் முதல் போக நெல் அறுவடை பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். நெல்லுக்கு போதிய விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கம்பம் பள்ளத்தாக்கு பகுதியான லோயர்கேம்ப் முதல் பழனிசெட்டிபட்டி வரை சுமார் 14,707 ஏக்கர் பரப்பில் முல்லை பெரியாறு அணை மூலம் இருபோக நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கம்பம் அருகே உள்ள ஏழரசு களம், ஊமையன் வாய்க்கால், சின்ன வாய்க்கால், சுருளிப்பட்டி தொட்டன்துறை உள்ளிட்ட பகுதிகளில் கடந்த சில மாதங்களுக்கு முன்பாக முதல்போக நெல் நடவு செய்யப்பட்டு அறுவடைக்கு தயார் நிலையில் இருந்தது. கடந்த ஆண்டு போதிய பருவமழை இல்லாததால் போதிய தண்ணீரின்றி இரண்டாம்போக நெற்பயிர்கள் கருகின. தற்போது கடந்த சில மாதங்களாக பரவலாக மழை பெய்து வருவதால், முதல் போக நெற்பயிர்கள் நன்கு விளைந்து சில தினங்களாக

விவசாயிகள் நவீன இயந்திரங்கள் மூலம் அறுவடை பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். தஞ்சாவூர், வேலூர், மதுரை, தேனி, திருச்சி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து மொத்த வியாபாரிகள் கம்பம் பகுதிக்கு வந்து இங்கு அறுவடை செய்யப்பட்ட 60 கிலோ எடைகொண்டநெல் மூடை ரூ.950 வரை கொள் முதல் செய்கின்றனர். இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், 'கடந்த ஆண்டு இரண்டாம்போக நெற்பயிருக்கு தண்ணீர் பற்றாக்குறை காரணமாக போதிய விளைச்சல் இல்லாமல் கருகிய நிலையில் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டு வந்தது. நடப்பாண்டில் முதல் போக நெற்பயிருக்கு போதுமான அளவு தண்ணீர் கிடைத்த நிலையில் விளைச்சலும் நல்ல முறையில் உள்ளது. கடந்த முறை 60 கிலோ எடை கொண்ட மூடை ரூ. 750 வரை விற்பனை செய்யப்பட்டு வந்தது. இந்தாண்டு வெளியூர் வியாபாரிகள் மூடை 950 வரை கொள்முதல் செய்கின்றனர். இதனால் மகிழ்ச்சியாக உள்ளோம்' என்றனர்.

## பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 33 அடியாக உயர்வு

நாகர்கோவில், : குமரி மாவட்டத்தில் நேற்று மாலை ஒரு சில இடங்களில் லேசான சாரல் மழை பெய்தது. நேற்று காலை வரை மாவட்டத்தில் அதிகபட்சமாக நாகர்கோவிலில் 30.2 மி.மீ மழை பதிவாகி இருந்தது. பேச்சிப்பாறை 8.4, சிற்றார்-1ல் 7.8, சிற்றார்-2ல் 8.2, மாம்பழத்துறையாறு 11.6 மி.மீட்டர் மழை பதிவாகி இருந்தது. பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 33 அடியாக உயர்ந்துள்ளது. அணைக்கு 318 கன அடி தண்ணீர் வரத்து காணப்பட்டது. பெருஞ்சாணி நீர்மட்டம் 63.60 அடியாக இருந்தது. சிற்றார்-1ல் 14.43 அடி நீர்மட்டம் உள்ள நிலையில் 179 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருந்தது. 200 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது. சிற்றார்-2ல் 14.52 அடி நீர்மட்டம் காணப்படுகிறது.

**<u>காய்கறி சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி</u>**

பள்ளிப்பட்டு, : ஆர்.கே.பேட்டை வட்டாரத்தில் அமைக்கப்பட்ட குழுக்களில் 150 விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறை மூலம் நகர்ப்புற காய்கறி தொகுப்பு வளர்ச்சி திட்டத்தின் கீழ் காய்கறி சாகுபடி குறித்து ஒருநாள் பயிற்சி நேற்று நடைபெற்றது. இதில் ஆர்.கே.பேட்டை தோட்டக்கலை இயக்குனர் சித்த கங்கையா தலைமை தாங்கினார். மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் நவநீதகண்ணன் கலந்து கொண்டு உற்பத்தி இரு மடங்கு, வருமானம் மூன்று மடங்கு எடுப்பதற்கான தொழில்நுட்ப யுக்திகள் குறித்து விளக்கி பேசினார். தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் பராசக்தி விளக்கி கூறினார். இதில் விதை சான்று உதவி இயக்குனர் பிரதிப் குமார்சிஸ், கால்நடை மருத்துவர் ரவிசந்திரன், இளநிலை பொறியாளர் ஸ்ரீதர், தோட்டக்கலை உதவி வேளாண்மை அலுவலர்கள் சுப்ரமணியம், அண்ணாதுரை, நெடுஞ்செழியன், சுமதி உள்பட பலர் கலந்து கொண்டனர்.முடிவில் தோட்டக்கலை உதவி இயக்குனர் ஜெயலட்சுமி நன்றி கூறினார்.

**<u>சவுக்கு பயிரிடப்பட்ட நிலத்தில் இயந்திரங்கள் மூலம் களை அகற்றும் பணி</u>**

காட்டுமன்னார்கோவில், : காட்டுமன்னார்கோவிலில் பெரும்பாலானோர் விவசாயிகள். இங்கு நெற்பயிர்களுக்கு அடுத்து தைலம் மற்றும் சவுக்கு மரங்கள் வளர்க்கப்படுகிறது. ஆட்கள் பற்றாக்குறை, கூலி உயர்வு, உர விலை உயர்வு ஆகியவற்றின் காரணமாக விவசாயிகள் மாற்று பயிர்களை பயிர் செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். தற்போது பருவமழை குறைவு, தண்ணீர் பற்றாக்குறை காரணமாக மரக்கன்றுகளையே அதிகம் பேர் அதிக பரப்பில் பயிர் செய்து வருகின்றனர். காட்டுமன்னார்கோவில் அருகே வில்வகுளம் என்ற கிராமத்தில் இளங்கோவன் என்பவர் சுமார் 7 ஏக்கர் பரப்பில் சவுக்கு மரக்கன்றுகளை நடவு செய்துள்ளார். அனைத்து பணிகளும்

விவசாயத்தில் இயந்திரமயமாக்கப்பட்ட நிலையில் சவுக்கு கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ள வயல்களில் களைகளை அகற்றுவதற்கு இயந்திரங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. இதன்படி எளிதில் களைகளை அகற்றி வருவதாக கூறப்படுகிறது. வில்வகுளத்தில் பயிரிடப்பட்ட சவுக்கு கன்றுகள் விளை நிலத்தில் களை அகற்றும் பணியில் தொழிலாளர்கள் இயந்திரங்கள் மூலம் பணி செய்தனர்.

**கடலூர் மாவட்டத்தில் மழை அளவு விவரம்**

கடலூர், : கடலூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் நீர்நிலைகளில் தண்ணீர் தேங்கத் தொடங்கியுள்ளது. விவசாயிக்கு இந்த மழை மகிழ்ச்சியை அளித்துள்ளது.

கடலூரில் நேற்று பெய்த மழை அளவு விவரம்:

| | | |
|---|---|---|
| சிதம்பரம் | 27 | மி.மீ |
| கடலூர் | 47.40 | மி.மீ |
| பரங்கிப்பேட்டை | 28 | மி.மீ |
| காட்டுமன்னார்கோவில் | 3 | மி.மீ |
| ஸ்ரீமுஷ்ணம் | 3 | மி.மீ |
| பண்ருட்டி | 2.3 | மி.மீ |
| கொத்தாவாச்சேரி | 35 | மி.மீ |
| வானமாதேவி | 15.4 | மி.மீ |
| அண்ணாமலைநகர் | 34.5 | மி.மீ |
| சேத்தியாத்தோப்பு | 11 | மி.மீ |
| புவனகிரி | 18 | மி.மீ |
| லால்பேட்டை | 33 | மி.மீ |
| மேமாத்தூர் | 10 | மி.மீ |
| காட்டுமயிலூர் | 17 | மி.மீ |
| வேப்பூர் | 25 | மி.மீ |
| லக்கூர் | 25 | மி.மீ |

பெலாந்துறை 12 மி.மீ

மொத்தம் 346 மி.மீ

சராசரி மழை அளவு 16.5 மி.மீ

**<u>ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ரூ.15 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்</u>**

கோபி,: கோபி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் நடைபெற்ற ஏலத்தில் விவசாயிகள் கொண்டுவந்த கொப்பரை ரூ. 15 லட்சத்துக்கு ஏலம்போனது. கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வாரம்தோறும் நடைபெறும் ஏலத்தில் உள்ளூர் மற்றும் பங்களாபுதூர், கள்ளிப்பட்டி, கணக்கம்பாளையம், டி.என்.பாளையம், ஆயிபாளையம், வெட்டையம் பாளையம், குருமந்தூர், கரட்டுப்பாளையம், நம்பியூர், நடுப்பாளையம், காராப்பாடி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த கொப்பரைகளை கொண்டு வந்து ஏலம் மூலம் விற்பனை செய்கின்றனர். இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் 60க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டு, 304 மூட்டைகளில் கொப்பரைகளை கொண்டு வந்தனர். இதில் ஒரு கிலோ கொப்பரை குறைந்தபட்சம் ரூ. 100.35க்கும், அதிகபட்சமாக ரூ.106.50க்கும் சராசரியாக ரூ.103.42க்கும் ஏலம்போனது. விவசாயிகள் கொண்டுவந்த 304 மூட்டை கொப்பரை ரூ.15 லட்சத்துக்கு ஏலம்போனது. கடந்த வாரத்தைவிட இந்த வாரம் கிலோ ஒன்றுக்கு ரூ.4 வரை குறைந்துவிட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர். இதுகுறித்து ஒழுங்கு முறை விற்பனை கூட கண்காணிப்பாளர் மகேந்திரசிங் கூறுகையில், 'கடந்த சில வாரங்களாக கொப்பரை வரத்து அதிகமாக இருந்தது. ஆனால் இந்த வாரம் வரத்து குறைந்து காணப்பட்டது. அதே நேரத்தில் தேங்காய் எண்ணெய் விலையில் சரிவு ஏற்பட்டதாலும், தீபாவளி பண்டிகை என்பதாலும்

கொப்பரையின் விலையும் கிலோ ஒன்றுக்கு ரூ. 4 வரை குறைந்துள்ளது' என்றார்.

**<u>வேளாண் படிப்புகளை படித்தால் உயர் பதவிகளை அடையலாம்</u>**

ஊட்டி, : வேளாண்த் துறை சார்ந்த படிப்புகளை படித்தால் உயர்பதவிகளில் பணியாற்றிட முடியும் என வேளாண்மை கல்வி தின விழாவில் தெரிவிக்கப்பட்டது. ஊட்டியில் உள்ள மத் திய மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் வேளாண்மைக் கல்வி தின விழா நேற்று நடந்தது. விழா ஒருங்கிணைப்பாளர் ராஜன் வரவேற்றார். ஆராய்ச்சி மைய தலைவர் (பொறுப்பு) டாக்டர் சுந்தராம்பாள் தலைமை தாங்கினார். இதில் நீலகிரி மாவட்ட கூட்டுறவு இணை பதி வாளர் முருகன் பேசு கையில், தமிழ்நாட்டை பொறுத்தவரை வேளாண் துறை சம்பந்தமான படிப்புகளை படித்தவர்கள் தான் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற உயர் பதவிகளில் பணியாற்றுகின்றனர். வேளாண்மைத்துறை படிப்புகளை படித்தால் கண்டிப்பாக உயர்பதவிகளை பெற முடியும். நம் நாட்டின் முதுகெலும்பாக விவசாயம் விளங்கி வருகிறது. எனவே மாணவ, மாணவியர்கள் விவசாயம் சம்பந்தமான படிப்புகளை பயில ஆர்வம் காட்ட வேண்டும், என்றார். தமிழ்நாடு வேளாண் மை பல்கலைக்கழக பேராசிரியர் அனிதா பேசு கையில், 'வேளாண்மை, விவசாயம் சம்பந்தமான பட்டப்படிப்புகளுக்கு எதிர்காலத்தில் நல்ல வாய்ப்புகள் உள்ளன. தோட்டக்கலை, வேளாண் மை, வனம் சார்ந்த படிப்புகளுக்கு ஏராளமான வேலைவாய்ப்புகள் குவிந்து கிடக்கின்றன. மேலும் வேளாண்த்துறை சம்பந்தமான ஆராய்ச்சி படிப்பு படிப்பவர்களுக்கு வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு உள்ளது. எனவே வேளாண்மை சம்பந்தமான படிப்புகளை படிக்க மாணவ, மாணவியர்கள் முன்வர வேண்டும்,' என்றார். தொடர்ந்து வேளாண்மையின் முக்கியத்துவம் மற்றும் வேளாண் மை அறிவியலில் பட்டம் பெற்றால் அதற்கான வேலைவாய்ப்புகள், உயர்கல்வி வாய்ப்புகள் போன்றவைகள் குறித்து

விளக்கப்பட்டன. மேலும் ஆராய்ச்சி மையத்தில் உள்ள அருங்காட்சியகம், மண் ஆய்வுக்கூடம், ஆராய்ச்சி மையத்தில் உள்ள கண்காணிப்பு மையம் போன்றவற்றிற்கு மாணவ, மாணவியர்களை அழைத்து சென்று செயல்முறை விளக்கம் காண்பிக்கப்பட்டது. வேளாண்மை கல்வி பயின்ற விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடல் நிகழ்ச் சியும் நடந்தது. இதன் மூலம் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு வேளாண்மை கல்வி பற்றிய விழிப்புணர்வும் அதில் பட்டம் பெறுவதற்கான ஊக்கமும் கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள பள்ளிகளை சேர்ந்த ஏராளமான மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

**<u>செட்டிக்குளம் வணிக வளாகத்தில் ரூ 1.08 லட்சத்துக்கு வெங்காயம் ஏலம்</u>**

பெரம்பலூர், : செட்டிக்குளம் வெங்காய வளாகத்தில் 8,279 கிலோ வெங்காயம் ரூ.1.08 லட்சத்திற்கு ஏலம் மூலம் விற்பனை ஆனது என கலெக்டர் தரேஸ்அகமது தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது : பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் தாலுக்கா, செட்டிக்குளத்திலுள்ள வெங்காய வணிக வளாகத்தில் கடந்த 16ம் தேதி திறந்தமுறை ஏலம் நடைபெற்றது. இதில் செட்டிக்குளம், நாட்டார்மங்கலம், அம்மாபாளையம், மாவலிங்கை, இரூர், சிறுவயலூர், சத்திரமனை, பொம்மனப்பாடி, புள்ளம்பாடி ஆகிய கிராமங்களை சேர்ந்த 35 விவசாயிகள் தங்களது சின்ன வெங்காயத்தை திறந்தமுறை ஏலத்திற்கு கொண்டுவந்து விற்பனை செய்தனர்.செட்டிக்குளம், துறையூர் அம்மாபாளையம், பொம்மனப்பாடி, சத்திரமனை, மற்றும் பாடாலூர் ஆகியப் பகுதிகளிலிருந்து 10 வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்ட னர். விவசாயிகள் கொண்டுவந்த 155 மூட்டை, அதாவது 8,279 கிலோ எடை கொண்ட சின்ன வெங்காயத்தை வியாபாரிகள் மற்றும் விதைவெங்காய விவசாயிகள் ஏலத்தில் எடுத்தனர். இந்தஏலத்தில்

பழைய பட்டறைவெங்காயம் அதிகப் பட்சமாக ரூ. 11க்கும், புதிய வெங்காயம் கிலோ ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ. 24க்கும் சராசரியாக கிலோ ஒன் றுக்கு ரூ. 13க்கும் விலைபோனது. இதன்மூலம் ரூ. 1,08,897க்கு வெங்காயம் விற்பனை செய்யப்பட்டது. இந்த வணிக வளாகத்தில் செவ்வாய், வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் திறந் தமுறை ஏலம் நடத்தப்படுகிறது. எனவே விவசாயிகள் தங்களது வெங்காய விளை பொருளை சனிக்கிழமை (18ம்தேதி) கொண்டுவந்து விற்பனை செய்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது எனத் தெரிவித்துள்ளார்.

<u>பெரம்பலூர், அரியலூரில் பரவலாக மழை: விவசாயிகள் மகிழ்ச்சி</u>

பெரம்பலூர், : பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் நேற்று பரவலாக மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். ஆலத்தூர் தாலுகா பகுதிகளில் உள்ள கிராமங்களில் விவசாயிகள் தங்கள் நிலங்களில் வெங்காயம், பருத்தி, மக்காச்சோளம், சோளம் உள்ளி¢ட்ட விவ சாயப் பயி¢ர்கள் சாகுபடி செய்துள்ளனர். கடந்த சில தினங்களாக கடுமையான வெயில் அடித்ததால் பருத்தி, மக்காச்சோளம் உள்ளிட்ட விவசாயப் பயிர்கள் மிகவும் வாடிய நிலையில் காணப்பட்டது. இந்நிலையில், நேற்று காலை முதலே ஆலத்தூர் தாலுகா பகுதி கிராமங்களான பாடாலூர், இரூர், ஆலத்தூர், நாட்டார்மங்கலம், செட்டிகுளம், மாவலிங்கை, குரூர், நக்கசேலம், கொளக்காநத்தம், காரை, தெரணி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களிலும் பரவலாக மழை பெய்தது. மேலும், மாலையில் சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக விடாமல் நல்ல மழை பெய்தது. கடந்த சில நாட்களாக மழையை எதிர்நோக்கி விவசாயிகள் மிகவும் கவலையுடன் இருந்தனர். இந்நிலையில், நேற்று மழை பெய்ததால், விவசாயிகள் ம¤கவும் மகிழ்ச்சியடைந்தனர். மேலும், நேற்று பெய்த மழையால் பயிரிட்டுள்ள விவசாயப் பயிர்களுக்கு மிகவும்

பயனுள்ளதாக இருப்பதுடன், வெங்காயம், மிளகாய் உள்ளிட்ட விவ சாயப் பயிர்கள் நடவு பணி கள் மேற்கொள்ளவும் ஏற்றவகையில் இருக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர். அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம், ஆண்டிமடம், மீன்சுருட்டி, காடு வெட்டி, சிலகால், உடையார்பாளையம், பொன்பரப்பி, வாரியங்காவல் பகுதிகளில் நேற்று மிதமான மழை பெய்தது. இந்த மழையை பயன்படுத்தி அனைத்து பகுதிகளிலும் விவசாயிகள் ஏர் உழவு செய்து உளுந்து விதைக்க ஏற்பாடு செய்துவருகின்றனர். ஜெயங்கொண்டம் வேளாண்மை விற்பனை கிடங்கில் விவசாயிகளுக்கு தேவைக்கேற்ப தரமான விதைகள் வழங்கவேண்டும், விற்பனை கிடங்குகளில் உள்ள விதைகள், உரங்கள் இருப்பு பற்றியும் பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் எதிர்பார்த்துள்ளனர். பெரம்பலூர் மாவட்டத்தில் நேற்று அதிகாலை 3 மணிக்குத்தொடங்கி 4 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் 6 மணி வரை யிலும் நல்ல மழை பெய்தது. இதனால் நீர் நிலைகளில் தண்ணீர் தேங்கும் அளவுக்கு நீர்ப்பிடிப்பு ஏற்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் அக்டோபர் மாதத்தில் நேற்று முன்தினம் வரை 329 மிமீ மழை பெய்துள்ளது. சராசரி 3 மிமீ மழை பதிவாகியுள்ளது. தொடர்ந்து மழை பெய்துவருவதால் மாவட்டத்தின் ஆண்டு சராசரி அளவை எட்டுவதோடு, நிலத்தடி நீர்மட்டம் உயருமென்பதால், பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## <u>கொள்முதல் செய்யும் நெல்லுக்கு விவசாயிகளின் வங்கி கணக்கில் உடனுக்குடன் பணம் பட்டுவாடா தாமதம் ஏற்பட்டால் தெரிவிக்க அழைப்பு</u>

தஞ்சை, : தஞ்சை மாவட்டத்தில் நடப்பு காரீப் பருவத்தில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கான தொகை உடனுக்குடன் வங்கி கணக்கில் செலுத்தப்படும் என்று கலெக்டர் சுப்பையன் தெரிவித்துள்ளார். தஞ்சை மாவட்டத்தில் நடப்பு 2014-15 காரீப் பருவத்தில் குறுவை பட்டம் நெல் அறுவடை மற்றும் தீபாவளி

பண்டிகையை முன்னிட்டு அறுவடையாகும் நெல்லுக்கு ஆதார விலையை விவசாயிகள் பெறுவதற்கும், அவர்களது நலன்கருதி நுகர்பொருள் வாணிப கழகத்தால் மாவட்டத்தில் 103 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. கடந்த 15ம் தேதி வரை 124 மெட்ரிக் டன் நெல் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு உரிய தொகையை எவ்வித தங்கு தடையின்றி உடனுக்குடன் வங்கி பண பரிவர்த்தனை மூலம் வங்கி கணக்கில் செலுத்தப்படுகிறது. இதுதொடர்பாக எவ்வித காலதாமதம் ஏற்பட்டாலும் கீழ்கண்ட தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு புகார் செய்யலாம். இதற்கு தஞ்சை சரகம் 04362-235823, கும்ப கோணம் சரகம் 0435- 2415207, பட்டுக்கோட்டை சரகம் 04373-235080 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு கலெக்டர் சுப்பையன் தெரிவித்துள்ளார்.

**கள்ளந்திரியில் 60 மிமீ மழை**

மதுரை, : மதுரை அருகே கள்ளந்திரியில் அதிகபட்சமாக 60 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் தென் மாவட்டங்களில் பெரும்பாலான பகுதிகளில் மழை பெய்தது. மதுரை மாவட்ட பகுதிகளில் பெய்த மழை அளவு விபரம் மி.மீ. அளவில் வருமாறு: மதுரை-7, வாடிப்பட்டி-6, சாத்தையாறு-5, மேட்டுப்பட்டி-3, அழகர்மலை அடிவாரத்திலுள்ள கள்ளந்திரி-60, புலிப்பட்டி-50, மேலூர்-25, தணியாமங்கலம்-15, இடையபட்டி-50, விரகனூர்-38.

**பசும்பொன்ஹெலிபேட் தளத்தில் விவசாய பணி துவக்கம்**

கமுதி, :கமுதி அருகே உள்ள பசும்பொன்னில் தேவர் குருபூஜை விழா பாதுகாப்பு பணிக்காகவும், முன்னாள் முதல்வர் ஜெய லலிதா தேவர்

ஜெயந்தி விழாவின்போது கலந்து கொள்ள ஹெலிகாப்டர் மூலமாக வந்து இறங்குவதற்காகவும் ஹெலிபேட் அமைக்கப்பட்டது. இந்த ஹெலி பேட் தளம் 10 ஆண்டுகளு க்கு முன்பு சிறிய அளவில் அமைக்கப்பட்டது. கடந்த பிப்ரவரி மாதம் 9ம் தேதி தேவர் சிலைக்கு தங்க கவசம் அணிவிப்பதற்காக அப்போது முதல்வராக இருந்த ஜெயலலிதா பசும்பொன் வந்தார். இதற்காக ஹெலிபேட் தளம் பெரிய அளவில் விரிவாக்கம் செய்யப்பட்டது ஹெலிபேட் தளம் அமைப்பதற்காக அப்பகுதி விவசாயிகளின் நிலங்கள் ஆக்கிமிக்கப்பட்டதாக கூறப்பட்டது. இதற்காக அப்போது நிலத்தின் உரிமையாளர்களுக்கு தற்காலிகமாக மட்டும் தலா ரூ.10 ஆயிரம் கொடுக்கப்பட்டது. இதனால் விவசாயிகள் அப்போது ஆட்சே பம் தெரிவிக்கவில்லை. ஆனால் தற்போது அந்த ஹெலிபேட் தளத்தை பெயர்த்துவிட்டு அப்பகுதி விவசாயிகள் விவசாய பணிகளை துவக்கியுள்ள னர். ஹெலிபேட் தளத்தை பெயர்த்துவிட்டு அதில் உழவு பணிகளை செய்துள்ளனர்.இந்தாண்டு குருபூஜை விழாவிற்கு ஜெயலலிதா வருவாரா என்பது கேள்விக்குறியாக இருப்பதால் ஹெலிபேட் தளம் சீரமைக்கப்பட வாய்ப்பில்லை என்பதால் தளத்தை பெயர்த்துவிட்டு விவசாயிகள் விவசாய பணியை மும்முரமாக துவக்கியுள்ளனர்.

## <u>பரமக்குடியில் ஒரு மணி நேரம் மழை</u>

பரமக்குடி, : பரமக்குடியில் நேற்று பகல் சுமார் ஒரு மணிநேரம் மழை பெய்தது. இதனால் பரமக்குடி-ராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலையில் மழைநீர் நிறைந்து ஓடியது. காமராஜர் நகர், ஆர்ச் பகுதியில் கழிவுநீருடன் மழைநீர் சேர்ந்ததால் அப்ப குதி முழுவதும் துர்நாற்றம் வீசியது.இதுதவிர பஸ் ஸ்டாண்ட், புனித அலங்கார அன்னை ஆலயம், பரமக்குடி-முதுகுளத்தூர் சாலை என தாழ்வான இடங்களில் அனைத்திலும் மழைநீர் நிறைந்தது. உழவர்சந்தை சாலையில் மழைநீர் ஓடியதால் கடை உரிமையாளாகள் சிரமம் அடைந்தனர். மாலை 5 மணிவரை வானம் இருண்டே காணப்பட்டதால் வாகனங்கள் முகப்பு

வெளிச்சத்துடன் சென்றன. கடந்த 2 நாட் களாக வெயிலின் தாக்கம் குறைந்து காணப்பட்டது. மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து உள்ளனர்.

## விதைப்பண்ணை அமைத்து இரட்டிப்பு லாபம் பெறலாம்

ராமநாதபுரம், :விதைப்பண்ணை அமைத்து இரட்டிப்பு லாபம் பெறலாம் என விதைச்சான்று உதவி இயக்குநர் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். ராமநாதபுரம் மாவட்டத்தில் தற்சமயம் வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளது. விவசாயிகள் நிலங்களில் நெல், சிறுதானியம், பயறு வகைகள் மற்றும் விதைப்பண்ணைகள் அமைத்து கூடுதல் மகசூல் மூலம் இரட்டிப்பு லாபம் பெறலாம் என வேளாண் மை விதைச்சான்று அலு வலர் அறிவித்துள்ளனர். ராமநாதபுரம் மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குனர் இங்கோவன் தெரிவித்துள்ளதாவது: மழை தொடங்கியுள்ள தை தொடர்ந்து மாவட்டத்தில் சாகுபடி பணிக ளை விவசாயிகள் தொடங்கியுள்ளனர். விதைப்பண் ணை அமைக்க இருக்கும் விவசாயிகள் முதலில் கரு விதை அல்லது ஆதார நிலை விதைகளை வட்டார விரிவா க்க மையங்கள் மற்றும் விதை விற்பனை உரிமம் பெற்ற தனியார் விதை விற்பனை நிலையங்களில் மட்டும் வாங்க வேண்டும். விதைக ளை கொள்முதல் செய்யும் போது சான்றட்டையில் விதைக்கான காலக்கெடு தேதி உள்ளதா என பார் த்து வாங்க வேண்டும். விதைக்குரிய ரசீது கேட்டு வாங்க வேண் டும். கொள்கலனில் உள்ள சான்றட்டையை விவசாயிகள் பத்திரமாக வைத்திருக்க வேண்டும். விதைப்பண்ணை பயிரை விதைத்த 35 நாட்கள் அல்லது பயிர் பூப்பதற்கு 15 நாட்கள் இவற்றில் எது முன்னதாக வருகிறதோ அதற்குள் பதிவு செய்ய வேண்டும். விதைப்பு நாள் 7 நாட்களுக்கு மேல் வித்தியாசம் இருந்தாலோ, தனித்தனி விதைப்பு அறிக்கைகளாக பதிவு செய்ய வேண்டும். 25 ஏக்கர்வரை ஒரே விதைப்பு அறிக்கையாக பதிவு செய்யலாம். விதைப்பு அறிக்கையுடன் விதை வாங்கியதற்கான

விற்பனை ரசீது மற்றும் சான்றட்டை இதனுடம் இணைக்க வேண்டும். விதைப்பண்ணைகளை சம்பந்தப்பட்ட விதை உற்பத்தியாளர்கள் மூலம் பதிவு செய்திட வேண்டும். நெல் மற்றும் சிறுதானிய பயிர்களுக்கு வயலாய்வு கட்டணமாக ஏக்கருக்கு ரூ.60ம் பயறு எண்ணெய் வித்து பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.50ம் செலுத்த வேண்டும். மேலும் ஒரு விதைப்பு அறிக்கைக்கு அனைத்து பயிர்களுக்கும் பதிவு கட்டணமாக ரூ.25ம் விதை பரிசோதனை கட்டணமாக ரூ.30ம் செலுத்த வேண்டும். விதைப்பண்ணை அமைக்க விருப்பமுள்ள விவசாயிகள் அந்தந்த வட்டார வேளாண்மை உதவி இயக்குநரை நேரில் அணுகி விபரம் அறியலாம் என தெரிவித்துள்ளார்.

## <u>மாவட்டத்தில் பரவலாக நல்ல மழை</u>

ராமநாதபுரம், : மாவட்டத்தில் நேற்று பரவலாக நல்ல மழை பெய்தது. இதனால் மாவட்டத்தில் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து விவசாய பணிகளை துவக்கியுள்ளனர். மாவட்டத்தில் நேற்று காலை 8 மணிவரை பெய்த மழையளவு மில்லிமீட்டரில் வருமாறு. ராமநாதபுரம், 61.70., கமுதி 24.70., முதுகுளத்தூர் 15., பாம்பன் 15.10., பரமக்குடி 18., திருவா டானை 25.20., தொண்டி 50.30., பள்ளமோர்குளம் 32., ராமேஸ்வரம் 12.20., தங்கச்சிமடம் 20.20., வட்டானம் 43., தீர்த்தாண்டதானம 29., ஆர்.எஸ்.மங்கலம் 49., கடலாடி 5.40., வாலிநோக்கம் 4.40 மழை பதிவாகியுள்ளது. மாவட்டத்தில் மொத்தம் 405.20 மி.மீட்டர் மழை பெய்துள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>பருவ மழை தீவிரம் அடைந்ததால் தமிழ்நாடு முழுவதும் பலத்த மழை</u>**

சென்னை, பருவ மழை தீவிரம் அடைந்து இருப்பதால் தமிழ்நாடு முழுவதும் நேற்று அனைத்து மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்து உள்ளது. இதனால் நீர் நிலைகளுக்கு நீர் வரத்து அதிகரித்து இருப்பதால் விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். பருவமழை தீவிரம் தமிழ்நாடு மற்றும் கேரளாவையொட்டி மேலடுக்கு சுழற்சி உருவாகி உள்ளதால் தமிழ்நாட்டில் அநேக இடங்களில் மழை பெய்யும் என வானிலை மையம் நேற்று அறிவித்து இருந்தது. அதன்படி தமிழ்நாட்டில் சென்னை உள்பட மாநிலம் முழுவதும் நேற்று இடி-மின்னலுடன் பரவலாக பலத்த மழை பெய்தது. தமிழ்நாட்டில் தென் மேற்கு பருவ மழை தீவிரம் அடைந்துள்ள நிலையில் வரும் 20-ந்தேதிக்கு பிறகு வட கிழக்கு பருவ மழை தொடங்க உள்ளது. இதனால் தமிழகம் முழுவதும் கடந்த சில நாட்களாக நல்ல மழை பெய்து வருகிறது. சென்னையில் நேற்று காலை முதல் மாலை வரை சுமார் 8 மணி நேரம் விட்டுவிட்டு பலத்த மழை பெய்தது. திருச்சி-தஞ்சாவூர் திருச்சி, புதுக்கோட்டை, அரியலூர், கரூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் நேற்று பரவலாக பலத்த மழை பெய்தது. தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சை, பட்டுக்கோட்டை, கும்பகோணம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று நல்ல மழை பெய்தது.

நாகை மாவட்டத்திலும் நேற்று பலத்த மழை பெய்தது. இதேப்போன்று மயிலாடுதுறை, சீர்காழி பகுதிகளிலும் மழை பெய்தது. திருவாரூர் மாவட்டத்தில் மன்னார்குடி, திருவாரூர் உள்ளிட்ட பகுதிகளில் நேற்று

மழைபெய்தது. கோவை-ஈரோடு கோவையில் நேற்று மாலை 4 மணி அளவில் நல்ல மழை பெய்தது. பொள்ளாச்சி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் மழை பெய்தது. இதே போல் ஆனைமலை, நெகமம், வால்பாறை போன்ற பகுதிகளிலும் மழை பெய்தது. மேட்டுப்பாளையம் பகுதியில் நேற்று மாலை 4 மணிக்கு இடி-மின்னலுடன் பலத்த மழை பெய்தது. நீலகிரி மாவட்டத்தில் மேகமூட்டம் காணப்பட்டாலும் மழை பெய்யவில்லை. ஈரோடு பகுதியில் நேற்று பலத்த மழை பெய்தது. கோபிச்செட்டிபாளையத்தில் நேற்றுமுன்தினம் இரவு சூறவாளி காற்றுடன் பலத்த மழை பெய்தது. தடப்பள்ளி-அரக்கன்கோட்டை பாசன பகுதியில் சூறாவளி காற்றினால் 5 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்ட நெல் பயிர்கள் சாய்ந்தன. அந்தியூர், ஆப்பக்கடல், சத்தியமங்கலம், புஞ்சைபுளியம்பட்டி உள்பட மாவட்டம் முழுவதும் நேற்று நல்ல மழை பெய்தது.

**<u>மதுரையில் தொடரும் மழை</u>**

மதுரையில் இந்த மாத தொடக்கத்தில் இருந்தே தினமும் மழை பெய்து வருகிறது. கடந்த 15 நாட்களில் மட்டும் மாவட்டத்தில் 70 மில்லி மீட்டர் மழை பெய்து உள்ளது. நேற்று முழுவதும் நகரில் சாரல் மழை பெய்தது. ராமநாதபுரம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை விடிய விடிய பலத்த மழை பெய்தது. சிவகங்கை மாவட்டத்தில் நேற்று லேசான மழை பெய்தது. விருதுநகர் மாவட்டத்தில் விருதுநகர், சாத்தூர், அருப்புக்கோட்டை, காரியாப்பட்டி, சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் ஆகிய பகுதிகளில் நேற்று முழுவதும் சாரல் மழை பெய்தது.

**<u>சோத்துப்பாறை அணை நிரம்பியது</u>**

தேனி மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு பலத்த மழை பெய்தது. இந்த மழையால் பெரியகுளம் அருகே உள்ள சோத்துப்பாறை அணைக்கு நீர் வரத்து அதிகரித்து வந்தது. நேற்று அணையின் கொள்ளளவான 126.28 அடியை நீர்மட்டம் தாண்டியதால், அணையில் இருந்து உபரி நீர்

வெளியேற்றப்பட்டு வருகிறது. அணை நிரம்பியதால் அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். தேனி மாவட்டத்தில் உள்ள கொம்புதூக்கி அய்யனார் கோவிலில் இருந்து குரங்கணி செல்லும் மலைச்சாலையில் நேற்று காலை 8 மணி அளவில் ராட்சத பாறை உருண்டு விழுந்தது. இதனால் அந்த பகுதியில் நேற்று காலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளின் தீவிர நடவடிக்கையால் காலை 11 மணிக்கு பின்னர் போக்குவரத்து சீரடைந்தது. திண்டுக்கல் மாவட்டத்தில் திண்டுக்கல், நத்தம், வத்தலக்குண்டு, வேடசந்தூர், பழனி என மாவட்டம் முழுவதும் நேற்று மழை பெய்தது. தேனி மாவட்டத்தில் பெரியகுளம், போடி, கம்பம், கூடலூர், உத்தமபாளையம் பகுதிகளில் மழை பெய்தது.
முல்லைப்பெரியாறு அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு பலத்த மழை பெய்தது. நெல்லை-தூத்துக்குடியில் மழை
நெல்லை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு விடிய விடிய மழை பெய்தது. நேற்று காலை 10 மணி அளவில் நெல்லை, பாளையங் கோட்டை பகுதிகளில் நல்ல மழை பெய்தது. தூத்துக்குடி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு பல இடங்களில் பலத்த மழை பெய்தது. நேற்று அதிகாலையிலும் மழை பெய்து. இந்த மழையால் தூத்துக்குடியில் உள்ள உப்பளங்கள் தண்ணீரில் மூழ்கி கிடக்கின்றன. கன்னியாகுமரி
குமரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு இடி-மின்னலுடன் கன மழை பெய்தது. அப்போது மின்னல் தாக்கியதில் நாகர்கோவில், சரலூர் பகுதிகளில் பல வீடுகளில் மின்சாதனங்கள் சேதம் அடைந்தன. நேற்று மாலையிலும் இடி-மின்னலுடன் பலத்த மழை பெய்தது.

புதுச்சேரி

புதுச்சேரியில் நேற்று காலை முதலே பரவலாக நல்ல மழை பெய்தது. இதனால் பொது மக்கள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

**<u>கண்டலேறு அணையில் இருந்து திறக்கப்பட்ட கிருஷ்ணா நதி நீர் தமிழக எல்லையை வந்தடைந்தது</u>**



ஊத்துக்கோட்டை, கண்டலேறு அணையில் இருந்து திறக்கப்பட்ட கிருஷ்ணாநதிநீர் தமிழக எல்லையை வந்தடைந்தது. தண்ணீர் திறப்பு கிருஷ்ணா நதி நீர் பங்கீட்டு திட்டத்தின்படி ஆண்டு தோறும் ஆந்திர அரசு தமிழ்நாட்டுக்கு 12 டி.எம்.சி. தண்ணீரை திறந்து விடவேண்டும். அதன்படி ஆந்திர மாநிலம் நெல்லூர் அருகே உள்ள கண்டலேறு அணையில் இருந்து கடந்த ஆகஸ்டு மாதம் 3-ந் தேதி முதல் பூண்டி ஏரிக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டது. கண்டலேறு அணையில் தண்ணீர் மட்டம் குறைந்ததால் கடந்த மாதம் 16-ந் தேதி தண்ணீர் திறந்து விடுவது நிறுத்தப்பட்டது. மொத்தம் 43 நாட்களில் 1.575 டி.எம்.சி. தண்ணீர் பூண்டி ஏரிக்கு வந்து சேர்ந்தது. தண்ணீர்வரத்து நின்று விட்டதால் பூண்டி ஏரியில் தண்ணீர் மட்டம் வெகுவாக குறைந்தது. தமிழக அதிகாரிகள் ஆந்திர அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி மீண்டும் கிருஷ்ணா நதிநீரை திறந்துவிட கோரிக்கை விடுத்தனர். இதை ஏற்று கண்டலேறு அணையில் இருந்து கடந்த 14-ந் தேதி மாலை பூண்டி ஏரிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. வினாடிக்கு 1,000 கனஅடி வீதம் கிருஷ்ணா கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. தமிழக எல்லையைவந்தடைந்தது மணிக்கு சுமார் 1 கிலோ மீட்டர் வேகத்தில் பாய்ந்து வந்த கிருஷ்ணா நதி நீர் நேற்று மாலை 4 மணிக்கு தமிழகஎல்லையான ஊத்துக்கோட்டை தாமரைபாக்கம் ஜீரோ பாயிண்டை வந்தடைந்தது. முதலில் வினாடிக்கு 5 கனஅடியாக வந்தது. அதன்பின் படிப்படியாக தண்ணீர் வரத்து அதிகரித்தது. 5 மணியளவில் வினாடிக்கு 30 கனஅடி விதம் வந்து

கொண்டிருந்தது. இங்கிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பூண்டி ஏரிக்கு இன்று காலை தண்ணீர் சென்றடைய வாய்ப்பு உள்ளது. தற்போது கண்டலேறு அணையில் இருந்து 1000 கனஅடி விதம் திறந்தாலும் இது படிப்படியாக அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால் சென்னையில் முழுமையான குடிநீர் வினியோகம் நடைபெறும் என்று அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

## விவசாயத்திற்கு மாற்றுத் தொழிலாக பட்டுப்புழு வளர்ப்பு



திண்டுக்கல் மாவட்டம் மாநிலத்தில் முதலிடம் பிடிக்கும் வகையில் விவசாயத்திற்கு மாற்றுத் தொழிலாக பட்டுப்புழு வளர்ப்பை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று கலெக்டர் வெங்கடாசலம் கூறினார். பட்டுப்புழு வளர்ப்பு திண்டுக்கல் அருகேயுள்ள கூவனூத்து புதூர் பகுதியில் பட்டுப்புழு வளர்ப்பு தொழில் அதிக அளவில் நடக்கிறது. அங்கு 41 விவசாயிகள் பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களது பட்டுப்புழு வளர்ப்பு கூடங்களை கலெக்டர் வெங்கடாசலம் பார்வையிட்டார். அதில் பட்டுப்புழு வளர்ப்புக்கு தேவையான மல்பரி செடிகள் சாகுபடி செய்யப்பட்டுள்ள விவசாய தோட்டங்கள், பட்டுப்புழு வளர்ப்பு கூடங்கள் ஆகியவற்றை அவர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் சம்பந்தப்பட்ட விவசாயிகளிடம் பட்டுப்புழு வளர்ப்பு தொழில் குறித்து கலெக்டர் வெங்கடாசலம் கேட்டறிந்தார்.

விலை நிர்ணய கோரிக்கை

அப்போது, பட்டுப்புழு வளர்ப்பு தொழில் தங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை விவசாயிகள் தெரிவித்தனர். மேலும் அவர்கள் உற்பத்தி

செய்யும் பட்டுக்கூடுகளை கோவை, தர்மபுரி, ஓசூர் மற்றும் கர்நாடகா மாநிலம் ராம்நகர் பகுதிகளில் விற்பனை செய்வதாக கூறினர். இதில் தமிழகத்தில் விற்பனை செய்யும் போது ரூ.350 வரை கிடைப்பதாகவும், கர்நாடகாவில் விற்பனை செய்தால் அரசு மானியம் உள்பட ரூ.450 கிடைப்பதாகவும் தெரிவித்தனர். அதேநேரம் மழைக்காலங்களில் பட்டுக்கூடுகளின் விலை வீழ்ச்சி அடைகிறது. இதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. இதை தவிர்க்க ஆண்டு முழுவதும் சீரான வருமானம் கிடைக்கும் வகையில் பட்டுக்கூடுகளுக்கு ஆதார விலையை நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். மேலும் பட்டுப்புழு வளர்ப்பு கூடங்களுக்கு மின்கட்டண சலுகை அளிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். இது தொடர்பாக அரசுக்கு பரிந்துரை செய்வதாக கலெக் டர் வெங்கடாசலம் உறுதி அளித்தார். மேலும் பட்டுப்புழு வளர்ப்பு தொழிலுக்கு தேசிய ஊரக வேலை திட்டத்தின் கீழ் பயனாளிகளை சேர்த்து கொள்ள பரிந்துரை செய்வதாகவும்தெரிவித்தார். மாநிலத்தில் 3-ம் இடம் இதையடுத்து கலெக்டர் வெங்கடாசலம் நிருபர்களிடம் கூறியதாவது:- திண்டுக்கல் மாவட்டத்தில் 1,259 விவசாய குடும்பத்தினர் பட்டுப்புழு வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டுள்ளனர். பட்டு உற்பத்தியில் மாநிலத்தில் 3-வது இடத்தில் திண்டுக்கல் இருக்கிறது. பட்டுப்புழு வளர்ப்புக்காக கிரியா ஊக்கி திட்டத்தில் மல்பரி நடவு செய்ய ஏக்கருக்கு ரூ.10,500 மானியம், அதிகபட்சமாக 5 ஏக்கர் வரை வழங்கப்படுகிறது. மேலும் தனிப்புழு வளர்ப்பு மனை மானியம், சொட்டுநீர் பாசன மானியம், இலவசமாக புழு வளர்ப்பு தளவாடங்கள் என ரூ.52,500 வரை வழங்கப்படுகிறது. அதேபோல் 3 ஆண்டுகள் ஆன புழுவளர்ப்பு கூடத்தின் கூரையை புனரமைத்து தரப்படுகிறது.

மாற்றுத்தொழில்

பழனி, ஒட்டன்சத்திரம், சாணார்பட்டி, வேடசந்தூர், வத்தலக்குண்டு ஆகிய இடங்களில் தொழில்நுட்ப சேவை மையங்கள் செயல்படுகின்றன. இந்த மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு மல்பரி நடவு தொழில்நுட்ப

உதவிகள் அளிக்கப்படுகின்றன. அதேபோல் பட்டுப்புழு வளர்ப்பு, பட்டுக்கூடு விற்பனை, நோய் தடுப்பு முறைகள், புதிய தொழில்நுட்பம் தொடர்பாக விவசாயிகளுக்கு வழிகாட்டுதல் செய்யப்படுகிறது. பட்டு உற்பத்தியில் திண்டுக்கல் மாவட்டம் முதலிடத்தை விரைவில் பிடிக்க வேண்டும். பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபட்டால் நல்ல வருமானம் கிடைப்பதோடு விவசாயிகளின் வாழ்க்கையும் மேம்படும். எனவே, விவசாயத்திற்கு மாற்றுத் தொழிலாக பட்டுப்புழு வளர்ப்பை கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக விவசாயிகளுக்கு வங்கிகடன் பெற்றுத்தரப்படும். இவ்வாறு கலெக்டர் வெங்கடாசலம் கூறினார். இந்த ஆய்வின்போது பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குனர் சச்சிதானந்தம், உதவி ஆய்வாளர்கள், இளநிலை ஆய்வாளர்கள் உடன் இருந்தனர்.

## <u>கோழிப்பண்ணையாளர்கள் தரமான மூலப்பொருட்களை உபயோகிக்க வேண்டும் ஆராய்ச்சி நிலையம் தகவல்</u>

கோழிப் பண்ணையாளர்கள் தரமான மூலப்பொருட்களை உபயோகிக்க வேண்டும் என்று ஆராய்ச்சி நிலையம் கேட்டுகொண்டுள்ளது. நாமக்கல் மாவட்டத்தில் இன்று (சனிக்கிழமை) முதல் அடுத்த 4 நாட்களுக்கு நிலவும் வானிலை குறித்து நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் கூறப்பட்டு உள்ளதாவது-: ஈரப்பதம் இன்று முதல் அடுத்த 4 நாட்கள் வானம் பொதுவான மேக மூட்டத்துடன் காணப்படும். இன்று 8 மி.மீட்டரும், நாளை 8 மி.மீட்டரும், 20&ந் தேதி 4 மி.மீட்டரும், 21&ந் தேதி 5 மி.மீட்டரும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. காற்றின் வேகம் இன்று முதல் அடுத்த 4 நாட்களுக்கு முறையே 3, 4, 4, 3 கி.மீ. வேகத்தில் இருக்கும். தென்கிழக்கு திசையில் இருந்து வீசும். வெப்ப நிலையை பொறுத்த வரையில் அதிக பட்சமாக 87.8 டிகிரியாகவும், குறைந்தபட்சமாக 73.4 டிகிரி யாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக முறையே 88, 88, 85, 85

சதவீதமாகவும், குறைந்தபட்ச மாக முறையே 78, 78, 72, 72 சதவீதமாகவும் இருக்கும். கோழிகளுக்கு உற்பத்தியில் சாதகமாக சூழ்நிலையை ஏற்படுத்தினாலும் புதிய வரவு மூலப்பொருட்களில் காணப் படும் அதிகப்படியான ஈரத் தன்மை நீண்ட நாள் அவற்றை தரத்துடன் பாதுகாக்க முடி யாத ஒரு நிலையை ஏற்படுத் தும். அதுமட்டுமின்றி தீவனத் தின் ஈரத்தன்மையை அதி கரித்து அவை பூஞ்சை நச்சிற்கு வழிகோலும். ஆகவே தீவனத் தில் முன் எச்சரிக்கை நடவடிக் கையாக பூஞ்சை நச்சு முறிவு மற்றும் ஈரல் கண்டரூனர் மருந்துகளை சேர்க்க வேண்டும்.

மருந்துகள்

கடந்த வாரம் கோழியின நோய் கண்டறிதல் மற்றும் கண்காணிப்பு ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்ட கோழி கள் பெரும்பாலும் மேல்மூச்சுக் குழாய் நோய் மற்றும் குடற் புண்களினால் இறந்திருப்பது தெரியவந்து உள்ளது. ஆகவே பண்ணையாளர்கள் தீவன மூலப்பொருட்களில் கிளாட்டி ரியம் கிருமியின் மாசுபாடு உள்ளனவா என இந்த ஆய்வகத்தில் ஆய்வு செய்து தரமான மூலப்பொருட்களை உபயோகிப்பதுடன் பண்ணை உயிர் பாதுகாப்பு முறை களையும் கடைபிடிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

**<u>ராமநாதபுரத்தில் பலத்த மழை</u>**



ராமநாதபுரத்தில் நேற்று அதிகபட்சமாக 61 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது. மழை காற்று மண்டலத்தில் மேல் அடுக்கு சுழற்சி காரணமாக தமிழகம் முழுவதும் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து

வருகிறது. குறிப்பாக ஹுட் ஹுட் புயலை தொடர்ந்து இந்த மழை மேலும் தீவிர மடைந்து தமிழ கம் முழுவதும் இடைவிடாது பெய்து வருகிறது. தமிழகத் தின் மற்ற பகுதிகளில் எல் லாம் மழை பெய்த போது ராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் மழை பெய்யாமல் இப்பகுதி மக்களை கவலை கொள்ளச்செய்தது. இந்த நிலையில் தற்போது பெய்து வரும் மழையால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இந்த தொடர்மழை காரண மாக மாவட்டத்தில் உள்ள நீர்நிலைகளில் சிறிதளவு தண் ணீர் சேர்ந்துள்ளது. குறிப்பாக ஊரணிகள், கண் மாய்கள், குளங்களில் குறிப் பிடத்தக்க அளவுக்கு தண்ணீர் சேர்ந்துள்ளது. பலத்த மழை காரணமாக மாவட்டத் தில் தாழ்வான பகுதிகளில் மழை வெள்ளம் சூழ்ந்து காணப்படுகிறது. ராமநாதபு ரத்தில் தாழ்வான பகுதிக ளில் அமைந்துள்ள குடியிருப் புகளை சுற்றிலும் மழை வெள் ளம் சூழ்ந்துள்ளது. கடந்த 2 ஆண்டுகளாக பெய்யாமல் பொய்த்துப் போன வட கிழக்கு பருவமழை யால் வயல்வெளிகள் மட்டு மல் லாது விவசாயிகளின் மன மும் வாடிப்போயிருந்த வேளையில் இந்த மழை விவ சாயிகளுக்கு புதிய உற்சாகத்தை அளித்துள்ளது. கொட்டி தீர்த்தது வடகிழக்கு பருவமழை இன்னும் தொடங்காத நிலை யில் தற்போது பெய்து வரும் இந்த மழை விவசாயிகளுக்கு விவசாயத்தை தொடங்க ஆர் வத்தை ஏற்படுத்தி உள்ளது. கடந்த 2 ஆண்டுகளாக விவ சாயம் இல்லாமல் போனதால் இந்த ஆண்டு விவசாயத்தை மேற்கொள்ளலாமா? வேண் டாமா? என்ற மனக்குழப்பத் தில் இருந்த விவசாயிகள் தற் போது பெய்து வரும் மழை யால் இந்த ஆண்டு வட கிழக்கு பருவமழையும் நன் றாக கைகொடுக்கும் என்ற நம் பிக்கை ஏற்பட்டு விவசாய பணிகளை தொடங்கி உள்ள னர். இவ்வாறு ராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்தம் உள்ள 1 லட்சத்து 27 ஆயிம் எக்டேர் நெல் விவசாய பரப் பளவில் தற்போதைய சூழ் நிலையில் ஏறத்தாழ 90,000 எக்டேரில் விவசாயிகள் நெல் விவசாய பணிகளை மேற் கொண்டுள்ளனர். நிலத்தை உழுது, விதைத்து பல் வேறு இடங்களில் 30 நாள் பயிராக பச்சை பசேலென காட்சியளிக் கிறது. தொடர்ந்து பெய்து வரும் மழையை பயன்ப டுத்தி விவசாயிகள் உரம் போடும் பணியில்

ஈடுபட்டுள்ளதோடு, களைகளை அழிக்கும் முயற் சியை மேற்கொண்டுள்ளனர். கண்மாய் பாசன விவசாயிக ளும் தற்போதைய மழையை பயன்படுத்தி நாற்று வளர்க் கும் முயற்சியில் இறங்கி உள்ள னர். மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி வரை பதி வான மழையளவு விவரம் (மில்லி மீட்டரில்) வருமாறு:- கமுதி- 29.7, முதுகுளத்தூர்-15, பாம்பன்-15.1, பரமக்குடி-18, ராமநாதபுரம்-61.1, திருவா டானை-25.2, தொண்டி-50.3, பள்ளமோர்குளம்-32, ராமே சுவரம்-12.2, தங்கச்சிமடம்-20.2, வட்டாணம்-43, தீர்த் தாண்டதானம்-29, ஆர்.எஸ்.மங்கலம்-49, கடலாடி -5.4, வாலிநோக்கம்-4.4. மாவட் டம் முழுவதும் சராசரியாக 25.32 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது. அதிக பட் சமாக ராமநாதபுரத்தில் 61.7 மி.மீ. மழை பதிவாகி இருப் பது குறிப்பிடத்தக்கது.

## <u>நெல்லை மாவட்டத்தில் விடிய விடிய பலத்த மழை</u>

நெல்லை மாவட்டத்தில் நேற்று முன்தினம் விடியவிடிய மழை பெய்தது. ஆனால் அணைப்பகுதியில் போதிய மழை பெய்யவில்லை.

<u>வடகிழக்கு பருவமழை</u>

நெல்லை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை சில தினங்களுக்கு முன்பு தொடங்கியது. இதையொட்டி கடந்த 2 நாட்களாக மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்து வந்தது. நேற்று முன்தினம் இரவில் நெல்லை, பாளையங்கோட்டை பகுதியில் விடியவிடிய பலத்த மழைபெய்தது. இதனால் ஆங்காங்கே மழை நீர் குளம் போல் தேங்கி கிடந்தது. நெல்லை சந்திப்பு பஸ்நிலையம் மற்றும் கலெக்டர் அலுவலகத்தில் மழைநீர் குளம் போல் தேங்கி கிடந்தது. நெல்லையில் நேற்று காலையில் வெயில் அடித்தது மதியம் 12 மணிக்கு பலத்த மழை பெய்தது. அதன் பிறகு சாரல் மழை போல் தூறிக்கொண்டே இருந்தது.

<u>மழை அளவு</u>

நெல்லை மாவட்டத்தில் நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை விவரம் மில்லி மீட்டரில் வருமாறு:–

அம்பை –32.4, ஆய்க்குடி –30.2, சேரன்மாதேவி –22.2, மணிமுத்தாறு–15.4, நாங்குநேரி–156, பாளையங்கோட்டை –32.6, ராதாபுரம்–28, பாபநாசம் –6, சங்கரன்கோவில் –10, செங்கோட்டை –9, சிவகிரி –13.2, தென்காசி –10.8, நெல்லை –16, ஆலங்குளம் –27.2, வீரகேரளம்புதூர் –11, கடனா அணை –5.6, ராமநதி –30, கருப்பாநதி –8, குண்டாறு –7, வடக்குப்பச்சையாறு அணை –69.2, நம்பியாறு–5, கொடிமடியாறு–40

நெல்லை மாவட்டத்தில் உள்ள அணைகள் உள்ள பாபநாசம், கடனா, ராமநதி, கருப்பாநதி அணைப்பகுதிகளில் போதிய மழை பெய்யவில்லை. இதனால் அணைக்கு நீர்வரத்து அதிகரிக்கவில்லை.

## நெல்லை மாவட்டத்தில் விடிய விடிய பலத்த மழை

நெல்லை மாவட்டத்தில் நேற்று முன்தினம் விடியவிடிய மழை பெய்தது. ஆனால் அணைப்பகுதியில் போதிய மழை பெய்யவில்லை.

### வடகிழக்கு பருவமழை

நெல்லை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை சில தினங்களுக்கு முன்பு தொடங்கியது. இதையொட்டி கடந்த 2 நாட்களாக மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்து வந்தது. நேற்று முன்தினம் இரவில் நெல்லை, பாளையங்கோட்டை பகுதியில் விடியவிடிய பலத்த மழைபெய்தது. இதனால் ஆங்காங்கே மழை நீர் குளம் போல் தேங்கி கிடந்தது. நெல்லை சந்திப்பு பஸ்நிலையம் மற்றும் கலெக்டர் அலுவலகத்தில் மழைநீர் குளம் போல் தேங்கி கிடந்தது. நெல்லையில் நேற்று காலையில் வெயில் அடித்தது மதியம் 12 மணிக்கு பலத்த மழை பெய்தது. அதன் பிறகு சாரல் மழை போல் தூறிக்கொண்டே இருந்தது.

### மழை அளவு

நெல்லை மாவட்டத்தில் நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை விவரம் மில்லி மீட்டரில் வருமாறு:–

அம்பை –32.4, ஆய்க்குடி –30.2, சேரன்மாதேவி –22.2, மணிமுத்தாறு–15.4, நாங்குநேரி–156, பாளையங்கோட்டை –32.6, ராதாபுரம்–28,

பாபநாசம் –6, சங்கரன்கோவில் –10, செங்கோட்டை –9, சிவகிரி –13.2, தென்காசி –10.8, நெல்லை –16, ஆலங்குளம் –27.2, வீரகேரளம்புதூர் –11, கடனா அணை –5.6, ராமநதி –30, கருப்பாநதி –8, குண்டாறு –7, வடக்குப்பச்சையாறு அணை –69.2, நம்பியாறு–5, கொடிமடியாறு–40

நெல்லை மாவட்டத்தில் உள்ள அணைகள் உள்ள பாபநாசம், கடனா, ராமநதி, கருப்பாநதி அணைப்பகுதிகளில் போதிய மழை பெய்யவில்லை. இதனால் அணைக்கு நீர்வரத்து அதிகரிக்கவில்லை.